விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 20 புதன்கிழமை (05.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தமிழகத்தில் தொடரும் எதிர்ப்பு

# இலங். யாத்திரிகர்கள் மீது திருச்சியில் தாக்குதல்!

(திருச்சி)

இலங்கையிலிருந்து வந்த யாத்திரிகர்கள் சென்ற வாகனங்கள் மீது திருச்சி அருகே கல் வீசித் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

அந்தத் தாக்குதலில் வாகனங்களின் கண்ணாடிகள் சேதமடைந்து, யாத்திரிகர்கள் சிலருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

புத்தளம் மாவட்டம் ஷிலா என்ற பகுதியைச் சேர்ந்த 184 யாத்திரிகர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருச்சி வந்தனர்.

நேற்று முன்தினம் பூண்டி மாதா கோயில் திருவிழாவைக் காணச் சென்றார்கள்.

அங்கு வரக்கூடாது என விடுதலைச் சிறுத்தைகள், நாம் தமிழர் இயக்கம் மற்றும் ம.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையடுத்து அவர்கள் அங்கிருந்து உடனடியாகப் புறப்பட்டனர்.

நேற்றுக் காலை வேளாங்கண்ணி மாதா கோயிலுக்குச் சென்றபோது, அவர்களை உள்ளே அனுமதிக்க (19ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா வரும் இலங்கையருக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும்!

## இந்தியா உறுதியளிப்பு

இந்தியாவுக்கு வரும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தான் மேற்கொள்ளவுள்ளதாக இந்திய அரசாங்கம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

இலங்கையினால் விடுக்கப்பட்ட பயண எச்சரிக்கை குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் தமிழ்நாட்டிற்கு பயணம் செய்வது குறித்து இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட பயண எச்சரிக்கையை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம் என இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உட்பட இந்தியாவுக்குச் செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களின் (19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கிற்கும் நவி பிள்ளை வருவார்



(ஜெனிவா)

இலங்கைக்கு எதிர்வரும் 14-ம் திகதி விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஐ.நா. மனித வுரிமைகள் பேரவையின் ஆணையாளரான நவநீதம்பிள்ளை, தனது விஜயத்தின்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வருவதற்குத் திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

முன்னரான தனது நிகழ்ச்சி நிரலில் அவர் கொழும்பில் (19ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் வெற்றிக் கனவை அரசே கலைத்து விடுகிறது

## அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டு

**கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியடையக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

இது குறித்து கொழும்பு அரசியல் அவதானிகள் மேலும் தெரிவிக்கையில்,

அரசு தனக்குத்தானே சேறு பூசிக் கொள்ளும் நடவடிக்கைகளை கிழக்கில் அரங்கேற்றியமையாலேயே இத்தகைய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் இரும்புக் கரம் கொண்டு எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களைத் தாக்கி தடுத்து நிறுத்தும் அரசின் ஆதரவுக் குழுக்களை அரசு அடக்காது அவர்களின் அராஜக நடவடிக்கைக்கு துணை போனமையேயாகும்.

மேலும் கிழக்கு தேர்தல் களத்தில் கண்காணிப்பாளராகக் கடமையாற்றும் கபே அமைப்பு தேர்தல் வன்முறைகளை உடனுக்குடன் வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தி வந்ததுடன் அரசின் அசமந்தப் போக்கையும் கண்டித்து வருகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் ஆளும் கட்சி தோல்வியைத் தழுவும்

## புலனாய்வு அறிக்கையால் அரசு அதிர்ச்சி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிச்சயமாகத் தோல்வியைத் தழுவும் என்று அரசுக்கு புலனாய்வு அமைப்புகள் தகவல் வழங்கியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைக்கு வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பரப்புரைகள் தீவிரமடைந்துள்ளதாக அந்த புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பரப்புரைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முதல் நிலையிலும் அதற்கடுத்து முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐ.தே.க ஆகியன இரண்டாம், மூன்றாம் இடங்களிலும் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் எதிர்க் கட்சிகளின் கூட்டணி கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்ற வாய்ப்புகள் உள்ளதாகவும் புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து கிழக்கு மாகாண நிலைவரம் தொடர்பான இரகசியக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மகிந்த தலைமையில் (19ஆம் பக்கம் பார்க்க)

# சப்ரகமுவவில் சேவல்! கிழக்கில் வீடு! வாக்களிக்க மனோ கோரிக்கை

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் வாழ்கின்ற தமிழர்கள் சேவல் சின்னத்திற்கும், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் வாழ்கின்ற தமிழர்கள் வீட்டுச் சின்னத்திற்கும் வாக்களித்து நமது இன ரீதியான இருப்புகளை உறுதி செய்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

மலையக தமிழ் மக்கள் குறைந்தளவு வாக்குப் பலத்தைக் கொண்ட மாவட்டங்களில் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு தமது வாக்குகளை அளித்தமையாலும் மலையகத் தமிழ் கட்சிகள் (19ஆம் பக்கம் பார்க்க)

# போர் வெற்றியை விற்று அரசு ஆட்சி செய்கிறது

## -பொன்சேகா சாடல்

தற்போதைய அரசாங்கம் போர் வெற்றியை விற்று தனது வெற்றியை உறுதிப்படுத்தி வருகிறதே தவிர, நாட்டுக்காக எதனையும் செய்யவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அம்பாலாங்கொடைப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் (19ஆம் பக்கம் பார்க்க)

# திருப்பி அனுப்பியது சரியான முடிபல்ல!

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வருகை தந்த கால்பந்து விளையாட்டு வீரர்களை திருப்பி அனுப்புவது சரியான முடிபல்ல என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தொடர்கையில்,

டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விரைவில் ஐ.நா. சபைக்கு அனுப்பப்படும். (19ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கக் கூடாது!

## அந்தோனியிடம் தி.மு.க வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனியிடம் தி.மு.க மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.பிக்கள் நேரில் வலியுறுத்தினர்.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி மக்களவையிலும், மாநிலங்களவையிலும் தி.மு.க எம்.பிக்கள் குரல் கொடுத்தனர்.

மத்திய அரசு இலங்கை இராணுவத்தினருக்கு துணை போகிறதா என்றும் திமுக உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து தி.மு.க உறுப்பினர்கள் தன்னைச் சந்திக்குமாறு பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி கேட்டுக் கொண்டார்.

அதன்பேரில் தி.மு.க நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் திமுக எம்.பிக்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவனும் ஏ.கே.அந்தோனி (19ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய பயணத்தில் மகிந்த உறுதி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாதம் நடுப் பகுதியில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அறிவித்தபடியே இந்தியாவின் சாஞ்சியில் அமைக்கப்படவுள்ள பௌத்த கல்வி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அவர் இவ் விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வதேச அரசியலில் உணர்ச்சிக்கு இடமில்லை நிதானமாக செயற்படுவதுதான் புத்திசாலித்தனம்

## இந்த உண்மை மகிந்தவுக்கு தெரியும் - தினமணி

**சர்வதேச அரசியலில் உணர்ச்சிக்கு இடமில்லை. நிதானமாகச் செயற்பட்டு நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிந்திருக்கும் உண்மை நமக்குத் தெரியாமல் இருப்பது ஏன்? என இந்திய தினமணி நாளேடு கேள்வி எழும்பியுள்ளது.**

அந்நாளேட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைத் தமிழர்களுக்கு இலங்கை இராணுவம் அநீதி இழைக்கிறது என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்க வழியில்லை.

இலங்கை அரசின் மீதான நமது கோபம் நியாயமானது. ஆனால், இலங்கையைச் சேர்ந்த, கேள்விப்படாத ஒரு கால்பந்து அணி விளையாடக்கூடாது என்று சொல்வதும் அந்த அணியை அனுமதித்த அதிகாரியை பணியிடை நீக்கம் செய்வதும் அரசியல் எதிர்வினைகளாக இருக்க முடியுமே தவிர, சரியான இராஜதந்திர நடவடிக்கையாக இருக்க முடியாது.

தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மிகவாதிகள், திரைப்பட நட்சத்திரங்கள் டி.எம். கிருஷ்ணா உள்ளிட்ட கர்நாடக சங்கீதக் கலைஞர்கள் இலங்கைக்குச் சென்று வந்ததை யாரும் தவறாகக் கருதவில்லை. அப்படியிருக்கும் போது யாருமே கேள்விப்படாத கால்பந்து அணிக்கு மட்டும் ஏன் இத்தகைய எதிர்வினை?

இத்தகைய தேவையற்ற எதிர்வினைகளால் நாம் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் ஒருசேரத் துன்பத்தைக் கூட்டிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கவேண்டாம் என்று கேட்கிறோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்குமே பயிற்சி அளிக்கக் கூடாது என்கிறோம். இதனால் நாம் பெறும் பயன் என்ன? ஒன்றுமில்லை.

தமிழக மீனவர்களை தாக்கத்தான் இந்தப் பயிற்சி பயன்படும் என்று இங்குள்ள சில சிறிய அமைப்புக்கள் சொல்கின்றன. நாம் வேண்டாம் என்று சொன்னால், இலங்கை இராணுவ வீரர்கள், பீஜிங் போவார்கள். இந்தியர்களை தாக்க மிகச் சிறப்பான பயிற்சியை சீனா வழங்கும். தமிழர்களை வெறியுடன் இலங்கை இராணுவம் தாக்கும். பரவாயில்லையா? இதுதான் நமது இராஜதந்திரமா?

இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, பிறகு அவர்களுடன் எப்படிப் பேச்சு நடத்துவது? ராஜிய உறவுகளுக்கு என்ன அர்த்தம்? இலங்கைக் கடற்படை கைது செய்த தமிழக மீனவர்களை மீட்டு வர, விடுவித்து வரவேண்டுமானால் இலங்கையில் உள்ள இந்தியத் தூதர்தான் போய் நின்றாக வேண்டும்.

ஒரு இராணுவப் பயிற்சிக்கான ராஜிய உறவுகளைக் கூட சகித்துக் கொள்ள முடியாவிட்டால், இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைக்கும் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கும் எவ்வாறு தீர்வு காண்பது?

இலங்கையுடன் அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்வது என்பது சாத்தியமேயில்லை.

அருணாசலப் பிரதேசம் எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் சீனாவுடன் இந்தியா அடுத்தாண்டு கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தவுள்ளது. ராஜிய உறவுகளைத் தக்க வைக்க இதைச் செய்தாக வேண்டியுள்ளது.

அதேநிலைமைதான் இலங்கை அரசுடனான இந்திய அரசின் உறவும். இவை ராஜிய உறவுகள். இதை உணர்வுபூர்வமாகப் பார்ப்பது தவறு.

ராஜபக்ஷ குடும்பத்தினர் திருப்பதி கோயிலுக்கு வந்தால், அவர்களை அனுமதித்த ஆந்திர அரசு மீது நாம் ஆத்திரப்படவா முடியும்? ராஜபக்ஷ உறவுகள் இங்கே இராமநாதபுரம் வந்தாலும் பாதுகாப்புடன் தரிசனம் செய்ய அனுமதிப்பது தானே பண்பாடு. அது தானே ராஜிய உறவுகளை மேம்படுத்தும் வழிமுறை.

இராணுவப் பயிற்சிக்கு எதிர்ப்பு என்பது ஒருபுறம் இருக்கட்டும். திருச்சி, கலைக்காவிரி கல்லூரியில் நடனத்துக்காக வந்த இலங்கை மாணவர்களை திரும்பிப் போ என்று ஓர் அமைப்பு குரல் கொடுக்கிறது.

பூண்டி மாதா கோவில் விழாவுக்கு வந்த சிங்களவர்கள் வெளியேற வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறது.

அப்படியானால் இலங்கைத் தமிழர்களைத் தவிர வேறு யாரும் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு வரக்கூடாதா? பயிற்சிக்காக இலங்கை மருத்துவர்கள் இங்கே வரக்கூடாது. சிகிச்சைக்காக சிங்களவர் வரக்கூடாது. படிப்புக்காக மாணவர்கள் வரக்கூடாது. விளையாட வரக்கூடாது. சாமி கும்பிட வரக்கூடாது. புத்த ஹயாவில் சிங்களவர் நுழையத் தடை விதிக்கவேண்டும்.

ஆனால், ஈழத் தமிழர்களின் வாழ்வைக் குலைத்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் சிங்கள அதிகாரிகளும் பாதுகாப்புடன் வந்து செல்லலாம் அப்படித்தானே?

நாம் திருப்பி அனுப்பினால் அவர்கள் திருப்பி அடிப்பார்கள் அடிவாங்கப் போவது இங்கே ஆர்ப்பாட்டம் நடத்தும் சிறு அமைப்புக்களோ அல்லது அரசியல் தலைவர்களோ அல்ல. சாதாரண இலங்கைத் தமிழனும், தமிழக மீனவனும் தான் என்பதை மறந்து விடக் கூடாது.

சர்வதேச அரசியலில் உணர்ச்சிக்கு இடமில்லை. நிதானமாகச் செயற்பட்டு நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். ராஜபக்ஷவுக்குத் தெரிந்திருக் கும் இந்தஉண்மை நமக்குத் தெரியாமல் இருப்பது ஏன்?

இன்றைய தேவை, நிதானம் மட்டுமே. ஆத்திரமும், அவசரமும், அரசியலுமல்ல இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)


A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணினிக் கற்கைநெறிகள் மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!!!

- Advanced Diploma in ICT (ADICT)
- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Accounting Packages
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Spoken English
- Diploma in Computer Hardware Eng
- Diploma in Computer Programming
- Diploma in Video Mixing
- Diploma in Website Designing
- Diploma in Internet e - Mail
- Certificate in Ethical Hacking & IT Security



FREE நீங்களும் அதிஷ்டசாலி ஆகுங்கள் !!! FREE

எமது நிறுவனத்தில் கற்கைநெறிகளுக்கு பதிவு செய்யும் மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு Pentium - 04 கணினி ஒன்று இலவசமாக வழங்கப்படும். மேலும் பதிவு செய்யும் அனைவருக்கும் Pendrive இலவசமாக வழங்கப்படும்.......இன்றே பதிவுகளுக்க விரையுங்கள்!!!

அனைத்து பதிவுகளுக்குமான இறுதி திகதி 15/09/2012



சென்ற வருடம் A/L பரீட்சைக்கு தோற்றி எமது நிறுவனத்தில் Advanced Diploma in ICT கற்கைநெறிக்கு பதிவு செய்து P- 04 கணினியை பரிசாக வென்ற பளையை சேர்ந்த மாணவி S.Sivatharsini, UNI இயக்குனரிடம் இருந்து கணினியை பெற்றுக் கொள்கின்றார். (C-943)

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்

UNI - ICT Education
Jaffna Road, Manipay
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

UNI - ICT Campus
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.

PHONE :- 021 321 6433 / 0777 110 862/ 021 22 55 867
(Affiliated to Nottingham College of London)


## மூன்று இலட்சம் பரீட்சார்த்திகள் தே.அ. அட்டைக்கு விண்ணப்பிப்பு

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள சுமார் மூன்று இல்ட்சம் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 16 வயது பூர்த்தியாகும் பாடசாலை பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

உரிய கால அவகாசத்திற்குள் பல்வேறு காரணங்களினால் விண்ணப்பிக்க முடியாமற் போன பாடசாலை பரீட்சார்த்திகள் தாமதிக்காது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார். (ந-2)


உயர்தர பரீட்சைகளின் பின் கொம்ப்யூட்டர் படிக்க சிறந்த வாய்ப்பு

Mega ஸ்கொலர்ஷிப் You can Win Upto 75%

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்

இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவ மாணவியருக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுக்கான தொழில்சார் பயிற்சி சிஎஸ்சி - ஏசியனிடமிருந்து மட்டுமே.

இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்




CSC - ASIAN COMPUTER EDUCATION

இலவச பரீட்சை அனுமதிகளை எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம். (C-905)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677 |
| நல்லூர் | 9, குமார வீதி, 021-2229191 |
| நெல்லியடி | கொடிகாமம் வீதி, 021-2262399 |
| சாவகச்சேரி | கட்டுக்காணி வீதி, 021-2270267 |
| கிளிநொச்சி | A9 வீதி, ஆனந்தபுரம், 021-2283925 |


## யாழ் கல்வி வலய அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் நாளை 6ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறும்.

சகல அதிபர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா அறிவித்துள்ளார். (ந)


'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் பெற : 773 212 711 (334)

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்
இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



(C-941)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மரமும் சிகிச்சையும்

"சேர்! எங்கள் வீட்டின் கொல்லைப் புறத்தில் உள்ள ஒரு மரத்திற்கு உடம்பு சரியில்லை... அநேகமாக அந்த மரத்திற்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என நினைக்கிறேன். நீங்கள் வந்து பார்வையிட்டால் நலமாக இருக்கும்" என்றார்.

இப்படியாக யாராவது உங்களிடம் வந்து கூறினால் என்ன சொல்வீர்கள்?

சொல்வதை ஒரு மாதிரியாக நோக்குவீர்கள் தானே!

ஆனால், ஜப்பான் நாட்டில் யாராவது இப்படியாகச் சொன்னால், ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனென்றால் அங்கே மரங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் வைத்தியர் ஒருவர் இருக்கிறார். அவரது வயது 90 ஆகும்.

அவரை "மர வைத்தியர்" என்றே அழைப்பார்கள். இனிமேல் இந்த மரம் உயிர் பிழைக்காது. பட்டுப் போய்விடும் என்ற நிலையில் இருப்பவைக்கு எல்லாம் உயிர் கொடுத்து விடுவார். அவை உயிர் பிழைத்துக் கொள்ளும். இதுவரைக்கும் ஆயிரம் மரங்களுக்கு மேலே காப்பாற்றியிருப்பார்.

மரங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு அவர் சில விசேட வைத்திய முறைகளை உருவாக்கியுள்ளார்.

நாங்கள் வைத்தியரிடம் போனால், உடனே கையைப் பிடித்து- நாடி பார்த்து; என்ன பிரச்சினையென்று கேட்டறிந்து நோயைக் கண்டு பிடிக்கிற அதேமாதிரி, அவரும் என்ன செய்வார் தெரியுமா? ஆரம்பத்திலே உள்ளங்கையை அந்த மரத்தின் மீது வைத்து கண்டு பிடிப்பார். அவ்வளவு ஒரு அனுபவசாலி.

இவர் வைத்தியம் பார்த்த மரங்கள் இலகுவில் மடியாது என்று அந்த பெரியவர் சொன்னார்.

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "ஒரு மரம் தற்கொலை செய்துள்ளது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சரியான நேரத்திலே நாம் அதை சற்று கவனித்தால் போதும்; அதன்பின் அது சொந்த பலத்திலே பிழைத்துக் கொள்ளும்" என்று கூறுகிறார்.

"இனி இந்த மரத்தின் மூலம் பலன் கிடைக்காது என்று நீங்களாக முடிவு செய்து வெட்டி விடாதீர்கள். மரங்களை வெட்டவே கூடாது" என்று கண்டிப்பாக எடுத்துரையுங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## கிளிநொச்சி மாவட்ட நலத்திட்டங்களுக்கு 50 இலட்சம் ரூபா ஒதுக்கினார் சிறீதரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனால் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள நலத்திட்டங்களுக்காக சுமார் 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2012 இன் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு 50 இலட்சம் ரூபா கல்வி, முன்பள்ளி, விளையாட்டுத்துறை, குடிநீர், சனசமூக நிலைய அபிவிருத்தி, நூலகம், மாதர் அபிவிருத்தி, மின்சாரம் என பல்வேறு துறைகளுக்கு வகுத்து ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/மத்திய ஆரம்ப பாடசாலை, கிளி/ இந்து ஆரம்ப பாடசாலை, கிளி/பன்னங்கண்டி இ.த.க. பாடசாலை என்பவற்றுக்கு நிழற்பட இயந்திரம் இல்லாத குறை தீரும்படியாக நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி திணைக்கள தளபாட கொள்வனவிற்குரூபாஒரு இலட்சமும் கிளிநொச்சி பரந்தன் அ.த.க.பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபாவும் கிளிநொச்சி தம்பிராசபுரம் அ.த.க. பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி செலியாதீவு அ.த.க.பாடசாலைக்கு 2 இலட்சம் ரூபாவும் மற்றும் உதயநகர் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு அபிவிருத்தி பணிகளுக்கு 2 இலட்சம் ரூபாவும் யாழ். மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு மின்பிறப்பாக்கி கொள்வனவிற்கு ஒரு இலட்சம் ரூபா உட்பட ஆறு பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் 20 விளையாட்டுக் கழகங்களுக்கு யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வகுத்து ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சனசமூக நிலையங்கள் குறித்து கவனத்தில் எடுக்கப்பட்டு 18 சனசமூக நிலையங்களுக்கு பல்வேறு திட்டங்களுக்கு 8 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கும் ஆலயங்களின் கட்டுமானப்பணிகளுக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் இந்த 50 இலட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

## நிர்வாகத்தெரிவு

செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவின் புனரமைப்பு கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 9 ஆம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கலாநிதி வல்லிபுர பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் உபதலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, கிளையின் செயலாளர் கு.பாலகிருஷ்ணன், பொருளாளர் ரி.உதயசூரியன், கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் இ.மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-134)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 60 | 80 | 80 |
| தக்காளி | 70 | 40 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 70 | 60 | 65 |
| கரட் | 100 | 110 | 90 | 130 |
| பூசணி | 40 | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 70 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 75 | 50 | 60 | 70 |
| பாகற்காய் | 80 | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 80 | -- |
| பயற்றங்காய் | 60 | 60 | 90 | 40 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 10 | 20 | 60 | 30 |
| போஞ்சி | 90 | 110 | 100 | 110 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 160 | 100 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 | 20-25 |

## இராசி பலன்

05.09.2012
(ஆவணி 20, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 12.41 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 1.11 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை

**மேடம்**

குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வேலைச்சுமை கூடும்.

**இடபம்**

பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது, செலவுகள் கூடும்.

**மிதுனம்**

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், பண வரவு எதிர்பார்த்தபடியே கிடைக்கும், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்**

உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், தலைமைப் பொறுப்புக்கள் தானே தேடி வரும், பயணத்தால் பண வரவுகள் வந்து சேரலாம்.

**சிங்கம்**

எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு, போட்டிகள் குறையும்.

**கன்னி**

சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம்.

**துலாம்**

உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**

எதிரிகள் விலகுவர், உடன் பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவர், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**தனுசு**

எதிர்பார்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், புத்தி சாதுரியமாக செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**மகரம்**

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை அமையும், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறலாம்.

**கும்பம்**

வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர்.

**மீனம்**

சேமிப்பு பழக்கம் அதிகரிக்கும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானம் தொடர்பிலான முறைப்பாடுகள் யாழ்.பொலிஸாரிடம் அதிகம் பதிவாகின்றன

## யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் பாரிய குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதும் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள், பொது இடங்களில் மது அருந்துபவர்கள், சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்வோர் தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எ்ரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் கடந்த காலங்களைவிட இந்த வருடம் பாரிய குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதோடு எதிர்வரும் காலங்களில் முற்றாக தடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இருப்பினும் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடுவோர் (கசிப்பு), மதுபோதையில் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவோர் மற்றும் பொது இடங்களில் மது அருந்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதுதவிர கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருட்கள் விற்பனை செய்வோரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த வாரத்தில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த 10 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு பொது இடங்களில் மது அருந்திய 9 பேரும் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய 9 பேரும் மதுபோதையில் பொதுமக்களுக்கும் வீதிப் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்திய 29 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கையானது மாதாந்தம் அதிகரித்து வருகிறது. பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்பதற்காக இரவு பகலாக நாம் வேலை செய்து வருகின்றோம். குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள நாம் தயாராகவுள்ளோம்.

மேலும் கடந்த காலத்தில் இடம்பெற்ற கழிவு ஒயில் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் எஸ்.ஜெயக்குமார் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட கழிவு ஒயில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். அவரிடமிருந்து பதில் கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்வோம்.

இதுதவிர வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கட்டடம் மீதான கழிவு ஒயில் தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் மாதந்தோறும் இடம்பெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தின்போது பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள் தெரிவிப்பார்கள். அதன்படி சில செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் குற்றச்செயல்கள் குறைந்த மாவட்டமாக யாழ்.மாவட்டம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் இன்று

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச சிவில் பொலிஸ் பாதுகாப்புக் குழுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் மற்றும் சிவில் பாதுகாப்புக்குழு பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-134)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்


யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு வைரவர் கோவிலடியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதிச்சந்தி, கனகரட்ணம் வீதியிலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கச்சேரியடி கண்டி வீதியில் பெனடிக்கோஸ் அருகிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை முள்ளி வீதியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)





இலங்கை வங்கி கொக்குவில் விரிவாக்கற் கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை (ATM) அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட பிராந் திய உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளர், கொக்குவில் கிளை பொறுப்பதிகாரி ஆகியோர் நிற்பதையும் கொக்குவில் இலங்கை வங்கியின் ATM இன் முதலாவது சேவையை வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் மாணிக்கசிங்கி பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

## ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எமது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மருதங்கேணி பிரதேச செயலர் ஐ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-9)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன யாழ்.வெளிக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு சுண்டிக்குழியிலுள்ள பஸ்ரியன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

எனவே, சகல வெளிக்கள உத்தியோகத்தரையும் பங்குபற்றும்படி செயலாளர் நா.சிவநாதன் கேட்டுள்ளார். (அ)

## ஆஸி.செல்ல முற்பட்ட 65 பேருக்கும் 14 நாட்கள் வரை விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 65 பேரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் இருந்து படகொன்றில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட வேளை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த நபர்களை கைது செய்ததுடன் அவர்களிடம் இருந்த உடைமைகளையும் மீட்டுள்ளனர்.

குறித்த 65 பேரையும் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் 65 பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன் வடமராட்சி பகுதியில் இருந்து அதிகளவான மக்கள் அவுஸ்திரேலியாவிற்கு படகுமூலம் தப்பிச் செல்வதாகவும் தெரிய வருகிறது. (அ-3-24)

## 14 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணத்தை பெறலாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் அந்தந்தப் பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவுகளை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறும் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் விரைவில் நிலுவையுடன் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## இரணியன் செல்வன் புராண இசை நடனம்

வலிகாமம் மேற்கு பகுதியில் 40 வருடங்களாக இயங்கி வரும் தொல்புரம் கலாலயம் நாடக மன்றத்தினர் வரலாற்றுப்புகழ் மிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தின் வேட்டைத்திருவிழாவை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு **இரணியன் செல்வன்** என்னும் இசை நாடகத்தினை ஆற்றுகை செய்யவுள்ளதாக கலாலய செயலாளர் வி.குணபாலா அறிவித்துள்ளார்.

செல்லையா உதயச்சந்திரனின் நெறியாள்கையில் கலாலய நாடக மன்றத்தினரால் இவ் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. பின்னர் கடந்த ஆண்டு குந்தியின் செல்வன் இசை நாடகத்தினை தொல்புரம் கலாலய நாடக மன்றத்தினர் ஆற்றுகை செய்து பாராட்டுக்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சங்கானை பேருந்து நிலையத்தில் கட்டாக்காலிகளின் தொல்லை மக்கள் விசனம்

சங்கானை மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள சங்கானை நகரப்பகுதியில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் பயணிகளின் தொகையை விட கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அவை பயணிகளை அச்சுறுத்துவதுடன் பயணிகளுக்கென அமைக்கப்பட்டிருக்கும் இருக்கைகள் மீது படுத்துறங்குவதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். சங்கானை நகரப் பகுதியானது தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் பகுதியாகும்.

இங்குள்ள மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, பேருந்து தரிப்பிடம், என்பவற்றிலும் இக் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

தற்போது கடும் வரட்சி நிலை காரணமாக நாய்களுக்கு விசர்நோய் ஏற்படுகின்ற சூழ்நிலை காணப்படுவதாலும் மக்கள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பேருந்து தரிப்பிடத்தில் அச்சநிலையுடனே நின்று பயணிக்க வேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட உரிய தரப்பினர் இக்கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தி மக்கள் நிம்மதியாக பேருந்து தரிப்பிடத்தில்நின்று பயணிப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித்தருமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)

## மானிய விலையில் உர விநியோகம்

(சாவகச்சேரி)

வரணி வடக்குப் பகுதியில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் நன்மை கருதி மானிய உர விநியோகம் வரணி வடக்கு விவசாய சம்மேளத்தினரால் வழங்கப்படவுள்ளது.

இம் மானிய உரத்தை பெறவிரும்பும் விவசாயிகள் வரணி வடக்கு விவசாய சம்மேளனச் செயலாளர் ச.தியாராஜாவிடம் விண்ணப்பப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

## பேசுவது தமிழ்த்தேசியம்; பிடிப்பது சிங்கக்கொடி என்கிறார் டக்ளஸ்

தமிழ்பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வு என்ற போர்வையில் இதுவரை காலமும் சுயலாப தமிழ் தலைமைகள் நடத்தி வந்த அரசியல் சூழ்ச்சிகளின் வரலாற்று அனுபவங்களை கற்றுக்கொண்டு கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்களை தமது வாக்களிக்கும் உரிமையை சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காலத்தின் தேவைகருதி தற்காலிகமாக நாம் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடாவிடினும் நாம் நேசிக்கும் கிழக்கு மாகாண மக்களுக்கும் சிறந்த அரசியல் வழிகாட்டலை தெரிவிக்கும் வரலாற்று கடமை எமக்கு உண்டு.

தமிழ்பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையின் பேரால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பேசி வருவது வெறும் தேர்தல் வெற்றிகளுக்கான வெற்றுக்கோசங்கள் மட்டுமே.77 இல் தமது பாராளுமன்ற பதவிகளை குறியாக வைத்து தமிழீழ ஆணை கேட்டு பதினெட்டு ஆசனங்களை பெற்றவர்கள் எதை சாதித்தார்கள்...

உணர்ச்சி பொங்கப் பேசி எமது மக்களை உசுப்பேற்றி தமது பாராளுமன்ற பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் நாட்டை விட்டே தத்தமது குடும்பங்களோடு ஓடிப்போனார்கள். கேட்டது தனி நாடு. கேட்ட தலைவர்களுக்கு கிடைத்தது தமிழ் நாட்டில் தனி வீடுகள். ஆனால், அவர்களால் உசுப்பேற்றி விடப்பட்டவர்கள் எமது தாயக மண்ணில் இரத்தம் சிந்தி அவலப்பட்டார்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு. அதை அன்றே ஏற்றுக் கொண்டிருந்தால் அல்லது ஏற்றுக் கொண்டவர்கள் சரிவர நடைமுறைப்படுத்தியிருந்தால் எமது மக்கள் இத்தனை அழிவுகளை அடைய வேண்டிய துயரம் நடந்திருக்காது.

1995 இல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எமது மக்களுக்கான சிறந்த அரசியல் தீர்வொன்றை முன்வைத்திருந்தார். ஆனாலும் தமது சுயலாபங்களுக்காக சக தமிழ் தலைமைகள் பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து ஊர்வலம் நடத்தி நாடாளுமன்றத்தில் வைத்து அதன் தீர்வு நகல்களை எரித்து அழித்தார்கள்.

இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை கேட்டிருந்தபோது அதை நானும் வலியுறுத்தி கேட்டிருந்தேன். ஆனாலும் ஒற்றுமையின் பலத்தை உலகிற்கு காட்டுங்கள்... சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் உரிமை பெற்று தருவோம் என மக்களிடம் போலி வாக்குறுதி கொடுத்து....

மக்களின் வாக்குகளை திருட்டுத்தனமாக அபகரித்து 22 நாடாளுமன்ற உறுப்புரிமைகளை பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் பேச்சுவார்த்தைக்கு இணங்க மறுத்து தமிழ் பேசும் மக்களை யுத்த களத்திற்கு பலியாக்கி விட்டு தாம் மட்டும் தமது குடும்பங்களோடு தப்பித்து சென்று உலக நாடுகளில் உல்லாசம் நடத்திக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு வரலாறு முழுவதும் கிடைத்த சந்தர்ப்பங்களை திட்டமிட்டோ தட்டிக் கழித்து தமிழ் பேசும் மக்களின் அழிவுகளுக்கு காரணமானவர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள்.

வெளியே பேசுவது வீர முழக்கம். அரசாங்கத்தின் பின் கதவு தட்டி அரச தலைவர்களோடு உள்ளே பேசிப் பெறுவது தமது சொந்த சலுகைகள். பேசுவது தமிழ்த் தேசியம் பிடிப்பது சிங்கக் கொடி. இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுயலாப அரசியல் வரலாறு.

இதை கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களே தீர்மானிக்க வேண்டும். கிடைப்பதை பெற்றுக் கொண்டு மேலும் பெறுவதற்கான மதிநுட்ப சாணக்கிய தந்திர அடிப்படையிலான இணக்க அரசியல் வழிமுறையே தமிழ் பேசும் மக்களை சுதந்திர பிரஜைகளாக எமது மண்ணில் வாழ வழிவகுக்கும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


YARL Properties

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com


## ஆங்கில தினப்போட்டி

கிளி/வலயமட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டி கள் இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் கிளி/இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்தில் இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.மயில்வா கனம் அறிவித்துள்ளார். (அ-3-254)

# தஞ்சை பூண்டி மாதாவிடம் சென்ற 177 சிங்களவர்கள் வெளியேற்றம்

## தமிழ் அமைப்புக்கள் போர்க்கொடி

தஞ்சை அருகே மாதா ஆலயத்துக்கு வந்த சிங்களவர்களை வெளியேற்றக்கோரி பல்வேறு அமைப்புகள் போராட்டம் நடத்தினார்கள். தஞ்சை அருகே உள்ள பூண்டியில் புகழ்பெற்ற மாதா ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்திற்கு சிங்களவர்கள் 177 பேர் நேற்று முன்தினம் வந்துள்ளனர்.

இலங்கையில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வந்த அவர்கள் வாகனத்தில் பூண்டி வந்தனர். பூண்டி மாதா ஆலயத்தில் உள்ள விடுதிகளில் தங்கி இருந்தனர். பூண்டி மாதா ஆலயத்தில் நடைபெற்று வரும் அன்னை மரியாள் பிறப்பு பெருவிழாவில் பங்கேற்க வந்தனர். இந்த தகவல் தமிழ் அமைப்புகளுக்கு கிடைததது. அவர்கள் சிங்களவர்களை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையென்றால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் குவிக்கப்பட்டனர். பல்வேறு தமிழர் அமைப்புகளை சேர்ந்தவர்கள் பூண்டி பேராலய அறையை முற்றுகையிட்டும் கீழே அமர்ந்தும் ராஜபக்ஷவுக்கு எதிராகவும் பூண்டி மாதா கோவிலில் தங்கியுள்ள சிங்களவர்களுக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.


அவர்கள் நேற்று வெளியேறி விடுவதாக கூறப்பட்டதையடுத்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இந்த சம்பவத்தால் பூண்டி மாதா ஆலயத்தில் பரபரப்பு உருவானது. நேற்று அதிகாலை 3 மணிக்கு பூண்டி மாதா ஆலயத்தில் தங்கி இருந்த 177 சிங்களவர்களும் வாகனத்தில் வெளியே புறப்பட்டு சென்றனர்.

ஆனால் அவர்களை பத்திரமாக திருச்சி அழைத்துச் சென்று அங்கிருந்து விமானத்தில் இலங்கைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளனர். (அ-2)

# அவுஸ். எதிர்க்கட்சிகளின் கோரிக்கை நியாயமற்றது

## அவுஸ்.பாதுகாப்பு அமைச்சர்



இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கை நியாயமற்றது என அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஸ்டீவன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் கோரிக்கையானது எதிர்க்கட்சிகளின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலிய மண்ணில் கால் பதிக்கும் முன்னதாகவே நாடு கடத்தப்பட வேண்டுமென அந்நாட்டு எதிர்க்கட்சிகளின் வெளிவிவகாரப் பேச்சாளர் ஜூலி பிசொப் மற்றும் குடிவரவுத்துறை பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் ஆகியோர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையானது புகலிடக் கோரிக்கையாளர் பிரகடனத்தையும் சர்வதேச சட்டத்தையும் மீறும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அடைக்கலம் வழங்குவது தொடர்பில் அவுஸ்திரேலிய சில நியதிகள் பின்பற்றி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)


CIMA Education

வடக்கு கிழக்கில் முன்னணி நிறுவனத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Foundation Batch Starts on (8 th Sep-2012 Saturday)

நீங்கள் பெற்ற தகைமைகளை ஆதாரப்படுத்தி உங்களுக்கே உரிய புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்



CAPSTONE
154 A/1, Navalar Road,
Jaffna.
T.P.0771250350, 021 222 0727

(சி/940)



யாழ் மண்ணில்....



கல்யாணமாலை
KALYANAMALAI
( சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது

தொடர்பு:- 021 720 1005

பதிவுக்கட்டணம்
ரூ.1000/-

குறிப்பு:- பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், மட்டுமே போட்டோ என்பன அவசியம்.
திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.
E-mail:-kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு/வித்தியானந்தாவுக்கு விளையாட்டு மைதானம்

(முல்லைத்தீவு)

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் நிதியுதவியுடன் மு/முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கு கூடைப்பந்தாட்ட மைதானம், கரப்பந்தாட்ட மைதானம் ஆகியவற்றின் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.


இக்கட்டுமானப்பணிகள் இம்மாதம் முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கரப்பந்தாட்ட மைதானத்தின் கட்டுமானப்பணிக்கு 4 இலட்சம் நிதியும் கூடைப்பந்தாட்ட மைதான கட்டுமானப்பணிக்கு 15 இலட்சம் நிதியும் மொத்தமாக 19 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி சுந்தரலிங்கம் தனுராஜ் தெரிவித்துள்ளார். (அ-3-267)

# தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் தீ; கோடிக்கணக்கான பொருட்கள் எரிந்தன

(தூத்துக்குடி)

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் நிலக்கரி கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் கன்வேயர் பெல்ட் உள்ளிட்ட கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகின. 2 பேர் காயம் அடைந்தனர்.

தூத்துக்குடி துறைமுகம் அருகே தமிழக அரசுக்கு சொந்தமான அனல்மின் நிலையம் இயங்கி வருகிறது. இது தமிழகத்தில் உள்ள முக்கிய அனல்மின்நிலையங்களில் ஒன்றாகும். அனல்மின்நிலையத்துக்கு தேவையான நிலக்கரி கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அங்குள்ள கரி இறக்குமதி தளத்தில் இருந்து அனல்மின் நிலையத்துக்கு நிலக்கரியை கொண்டு செல்வதற்காக துறைமுகம் முதல் அனல்மின் நிலையம் வரை சுமார் 4 கிலோ மீற்றர் நீளத்துக்கு கன்வேயர் பெல்ட் அமைக்கப்பட்டுள்ளது.



இது ஆசியாவிலேயே நீளமான கன்வேயர் பெல்ட் என்ற சிறப்புக்குரியது. சமீப காலமாக அவ்வப்போது நிலக்கரி எடுத்துச் செல்லும் கன்வேயர் பெல்ட் அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகி வருகின்றது.

இந்த நிலையில் தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் நேற்று முன்தினம் மீண்டும் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து அனல்மின் நிலையத்தின் 2, 3 ஆவது மின் உற்பத்தி பிரிவுகள் மற்றும் யார்டுக்கு நிலக்கரி கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட்டில் பகல் 11 மணி அளவில் திடீர் என்று தீப்பிடித்தது. இந்த பெல்ட்டில் பெரிய கட்டிகளாக உள்ள நிலக்கரியை அரைத்து தூள் போன்று மாற்றுவதற்கு பழைய கிரஷர் ஒன்றும் இயங்குகிறது.

இந்த கிரஷரில் தான் முதலில் தீப்பிடித்ததாக கூறப்படுகிறது. அப்போது பலத்த காற்று வீசியதால் தீ மளமளவென்று பரவத் தொடங்கியது. பின்னர் கன்வேயர் பெல்ட்டுக்கும் பரவியது. இதனால் அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது.

இது குறித்து தகவல் அறிந்ததும் 6 தீயணைப்பு வாகனங்களில் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கப் போராடினர்.

இந்த தீ விபத்தில் சுமார் 500 மீற்றர் நீளத்துக்கு கன்வேயர் பெல்ட் எரிந்தது. இதன் மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்தோனேசியா நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியில் ஏற்பட்ட அதிக உராய்வு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது தொடர்ந்து விசாரணை நடந்து வருகின்றது. (அ-2)

# கிழக்கு மாகாணமே தேர்தல் விதிகளை அதிகம் மீறியுள்ளது

## சுதந்திரமான தேர்தல் நடக்காது – கபே

(கொழும்பு)

இலங்கையில் மாகாணசபைத் தேர்தல்களுக்கான இறுதிக்கட்ட பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கபே அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பதிகாரி எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அங்கு தொடரும் தேர்தல் வன்முறைகள் பற்றி தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணமே தேர்தல் விதி மீறல்கள் அதிகரிக்கும் மாகாணமாக உள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நீலநிற ஆடைகளுடன் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களை தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுத்தி வருவதாகவும் முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமான, நீதியான தேர்தலை உறுதி செய்வதற்காக பொலிஸாருடன் இணைந்து உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் கூறியுள்ளார்.

பதவிநிலை அதிகாரிகள் தரத்தில் இருப்பவர்களை தவிர ஏனைய அரச ஊழியர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் இருப்பதாக கூறிய பிரதி ஆணையாளர், ஆனால் அவர்களை பிரசாரங்களில் ஈடுபடுமாறு அமைச்சோ அரச திணைக்களங்களோ பணிக்க முடியாது என்று சுட்டிக்காட்டினார். (அ-2)

# இலங்கை சரக்குக்கப்பல் டேபன் துறைமுகத்தில் தடுப்பு


டேபன் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை சரக்குக் கப்பல் தொடர்ந்தும் அங்கு நங்கூரம் இடப்பட்ட நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கொடியுடனான இந்தக் கப்பல் தான் சானியாவைச் சேர்ந்த கப்பல் நிறுவனம் ஒன்றிற்கு விற்கப்பட்டுள்ளதாகவும் அது குறித்து தென் ஆபிரிக்கக் கடல் பாதுகாப்பு அதிகார சபையின் கவனத்திற்கு கொண்டு வரப் படாத நிலையிலேயே கப்பலை தடுத்து வைக்க உத்தர விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் எம்.வி.லங்கா மஹாப்பொல என்ற இந்த கப்பலில் பணியாற்றிய மாலுமிகள் தமக்கான 85 ஆயிரம் அமெரிக்க டொலர் வேதனத்தை வழங்க கப்பல் நிறுவனம் தவறி விட்டதாக முறையிட்டனர்.

இவர்களது முறைப்பாடு குறித்த விசாரணையின் பின்னர் இவர்களுக்கான வேதனம் வழங்கப்பட்டு அவர்கள் தாயகம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

புதிதாக பணிக்கமர்த்தப்பட்ட கப்பல் பணியாளர்கள் கப்பலில் பணியாற்றுவதற்கான உரிய வசதிகள் இல்லை என தெரிவித்திருந்தனர். இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட தென் ஆபிரிக்க கடல் பாதுகாப்பு அதிகார சபை கப்பல் மாலுமிகளுக்கு சர்வதேச தரத்துடனான வசதிகள் இல்லை என தெரிவித்திருந்தனர்.

இதன் அடிப்படையிலேயே கப்பல் தொடர்ந்தும் டுபாய் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)



மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது மட்டு- கல்முனை காத்தான்குடி பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் நான்காவது சுரங்கப்பாதையைத் திறந்து வைத்ததைப் படத்தில் காணலாம்.


# கண்ணீர் அஞ்சலி

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு. அ.இ.கோபாலபிள்ளை



தோற்றம்
10.01.1945

மறைவு
01.09.2012

பரிந்த பார்வையில் பண்புள்ளங் கொண்டவர்
ஊரிலுள்ளோர் மீதிலன்பானவர்
புரிந்த நிலையில் பழகிவிடும் தன்மையானவர்
சிரித்த முகத்தினர் சிறந்த நற்கொடையினர்
பட்டென பாரினில் படுத்துறங்கி
சட்டெனக் கண்மூடி சடுதியில் சென்றார்
கிட்ட நின்றோரெல்லாம் எண்ணிக் கலங்கிட
எட்டாவழியது போயினர்! போயினர்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(சி/939)

கோபால் டிரேடிங் கோ உரிமையாளர்
5, கிரகரி பிளேஸ், கொழும்பு-06.
தொ.பே:-1122502718

E.S.P.நாகரத்தினம் சக நிறுவனம்
இல.52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் கணிதம், உடற்கல்வி, முறைசாராக் கல்வி ஆகிய பாடங்களுக்குரிய உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

அப்பதவிக்கு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையை சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது 3 வருடங்களேனும் சேவை ஆற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவை I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-I ஐ சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவை I இல் உள்ள ஆசிரியர் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை 2-I உடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோரிடம் இருந்து பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாதவிடத்து மட்டும் இலங்கை ஆசிரியர் சேவை 2-II ஐச் சேர்ந்த ஆசிரியர்களிடம் இருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

முறைசாராக் கல்விப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான தகுதிகள் தொழில் நுட்ப பாடத்தில் குறைந்த பட்சம் 7 வருட கற்பித்தல் அனுபவம் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது 5 வருட கற்பித்தல் அனுபவத்துடனான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

ஏனைய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அத்துறைசார்ந்த பாடங்களில் குறைந்தபட்சம் 7 வருட கற்பித்தல் அனுபவம் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது 5 வருட கற்பித்தல் அனுபவத்துடனான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

தெரிவுக்கு முன்பு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையுடன் கல்விப் புல அறிவு தொடர்பான எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கும் தோற்ற வேண்டும். விண்ணப்பங்களினை வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய் கல்வி வலயம், மாங்குளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# பான் கீ மூனை சந்திக்க விரைகிறார் ஸ்ராலின்

தமிழகத்தின் தி.மு.கட்சித் தலைவர் மு.கருணாநிதியை தமிழ் ஈழ தலைவரே என வர்ணித்து வெளியிடப்பட்ட பதாகை தமிழீழ உணர்வாளர்கள் மத்தியில் சலசலப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனைச் சந்திக்க மு.க.ஸ்ராலின் தலைமையிலான குழுவொன்று நியூயோர்க் செல்லவுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஈழத்தமிழர்களை மையப்படுத்தி சமீபத்தில் நடந்து முடிந்த டெசோ மாநாட்டின் தீர்மானங்களை கையளிக்கும் நோக்கில் மு.க.ஸ்ராலின், ரீ.ஆர்.பாலு மற்றும் சுப.வீரபாண்டியன் ஆகியோர் நியூயோர்க் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ள இவர்கள் இந்தியா திரும்பும் வழியில் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைச் சபைக்கும் விஜயம் செய்து டெசோ மாநாட்டுத் தீர்மானத்தின் நகல்களை அங்கும் கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# குழந்தை உயிருடன் இருக்கும் போதே இறந்து விட்டதாக கூறிய வைத்தியர்

(கொழும்பு)

ஒரே சூலில் மூன்று சிசுக்களில் ஒன்று உயிருடன் இருக்கும் போதே அனைத்தும் சொற்ப நேரத்தில் இறந்து விட்டதாகக் கூறி வைத்தியசாலையின் பிரேத அறைக்கு அனுப்பிய சம்பவம் ஒன்று பதுளை மாவட்டம் வெலிமடை வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளதாக அறிய வருகின்றது.

குறித்த சிசுக்களை பிறிதொரு மருத்துவர் ஆராய்ந்து பார்த்த போது ஒரு சிசு உயிருடன் இருந்தமை தெரியவந்துள்ளது.

உயிருடன் இருந்த சிசு உடனடியாக பதுளை மருத்துவமனைக்கு மாற்றியனுப்பப்பட்டுள்ளதுடன் அது தற்போது தேகநலத்துடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா பரணகம, கடுகல்ல, கொலிந்த பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு மூன்று குழந்தைகளை ஒரே சூலில் பிரசவித்துள்ளார்.

அந்தக் குழந்தைகளின் தந்தையே இவ்வாறு தெரிவித்துள்ளார். சிசுக்களின் இறுதி சடங்கை செய்வதற்கு அவற்றை கோரிய போது மீண்டும் பரிசோதனை செய்ததில் ஒரு சிசு உயிருடன் இருந்தமை தெரியவந்துள்ளது.

மருத்துவமனை நிர்வாகதொடர்பாகவும் குழந்தைகள் இறந்து விட்டதாக முதலில் சான்றிதழ் வழங்கிய மருத்துவர் மீதும் நடவடிக்கை எடுக்கும் வகையில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிப்படுகின்றது. (அ-2)

# 2012.09 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1666-லண்டனின் பெரும் தீ அணைந்தது. இதில் 13 ஆயிரத்து 200 வீடுகளும் 87 தேவாலயங்களும் எரிந்து அழிந்தன. 16 பேர் உயிரிழந்தனர்.

★ 1698- ரஷ்ய பேரரசன் முதலாம் பீற்றர் தாடி வைத்திருப்பவர்களுக்கு வரி அறவிட உத்தரவிட்டான்.

★ 1799- பாஞ்சாலங்குறிச்சியை மேஜர் பானர்மேன் தலைமையிலான படை முற்றுகையிட்டது.

★ 1800-மோல்டா பிரித்தானியாவினால் பிடிக்கப்பட்டது.

★ 1839-முதலாவது ஒப்பியம் போர் சீனாவில் ஆரம்பமானது.

★ 1880-ரஷ்யாவில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உலகின் முதலாவது மின்சார டிராம் (Tram) வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

★ 1881-மிச்சிகனில் இடம்பெற்ற தீயினால் மில்லியன் ஏக்கர்கள் வரை சேதமடைந்தது. 282 பேர் உயிரிழந்தனர்.

★ 1882-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தொழிலாளர் நாள் பேரணி நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

★ 1887-இங்கிலாந்தில் எக்செட்டர் நகரில் நாடக அரங்கில் தீப்பிடித்ததில் 186 பேர் உயிரிழந்தனர்.

★ 1902-சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் 14 மைல் நீளமான தொடரூந்துப் பாதை திறக்கப்பட்டது.

★ 1905-ரஷ்ய ஜப்பானியப் போர்: அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டின் அமைதி முயற்சியை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு நியூ ஹாம்ப்ஷயரில் எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.

★ 1914-முதலாம் உலகப் போர்: பாரிசின் வடகிழக்கே பிரெஞ்சுப் படைகள் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி அவர்களை வென்றனர்.

★ 1932- பிரெஞ்சு மேல் வோல்ட்டா பிளவடைந்து ஐவரிகோஸ்ட் பிரெஞ்சு சூடான் நைஜர் என மூன்று தனி நாடுகளானது.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா போரில் தனது நடுநிலையை அறிவித்தது.

★ 1961- அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு பெல்கிறேட்டில் இடம்பெற்றது.

★ 1969-மைலாய் படுகொலைகள்: அமெரிக்க இராணுவ லெப் வில்லியம் கலி 109 வியட்நாமிய பொது மக்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டான்.

★ 1972-ஜேர்மனியில் மியூனிக்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய இஸ்ரேலிய வீரர்களின் மீது பாலஸ்தீனத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1977-வொயேஜேர் 1 விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1978-காம்ப் டேவிட் ஒப்பந்தம்: இஸ்ரேலியப் பிரதமர் பெகினுக்கும் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துக்கும் இடையில் மேரிலாந்தில் அமைதி ஒப்பந்த மாநாடு ஆரம்பமானது.

★ 1980- உலகின் மிக நீளமான நெடுஞ்சாலைச் சுரங்கமான கோதார்ட் வீதிச் சுரங்கம் (16.224 கி.மீ) சுவிட்சர்லாந்தில் திறக்கப்பட்டது.

★ 1986- அமெரிக்க பான் ஆம் விமானம் 358 பேருடன் கராச்சியில் கடத்தப்பட்டது.

★ 1990- மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த 158 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2005- சுமாத்ராவில் பயணிகள் விமானம் ஒன்று தரையில் மோதியதில் தரையில் இருந்த 39 பேர் உட்பட மொத்தம் 143 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1872-வ. உ.சிதம்பரம்பிள்ளை, விடுதலைப் போராட்ட வீரர் (இ.1938)

★ 1888-சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் (இ.1975)

★ 1945-மு.மேத்தா, கவிஞர்

★ **1950-வீரசிங்கம் துருவசங்கரி, இலங்கையைச் சேர்ந்த அறிவியலாளரும் கண்டுபிடிப்பாளரும் (இ.2006)**

### இறப்பு

★ 1997-அன்னை தெரேசா (பி.1910)

### வீரசிங்கம் துருவசங்கரி

வீரசிங்கம் துருவசங்கரி இலங்கையைச் சேர்ந்த ஓர் அறிவியலாளரும் கண்டு பிடிப்பாளரும் மண் ஆராய்ச்சியாளரும் ஆவார். தொலைக்காட்டியாகவும் நுணுக்குக்காட்டியாகவும் பாவிக்கக்கூடிய கருவியொன்றை வடிவமைத்தார். அத்துடன் சூரிய அடுப்பு பனிக்கட்டி, பனிமழை போன்றவற்றை அளக்கும் கருவிகளையும் கண்டு பிடித்தார்.

#### வாழ்க்கைக் குறிப்பு

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட துருவசங்கரி புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் முன்னாள் அதிபர் ச.வீரசிங்கம் -அன்னப்பாக்கியம் தம்பதியருக்கு 12 ஆவது மகவாக 1950 ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 திகதி பிறந்தார். இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரியின் சகோதரர் ஆவார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் வேளாண்மைத் துறையில் முதுமாணி (MSc) பட்டத்தை 1977 இல் மொஸ்கோ லுமும்பா பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

பட்டப்படிப்பை முடித்து இலங்கை திரும்பிய துருவசங்கரி இலங்கையில் மகாவலித் திட்டத்தில் இணைந்து பணியாற்றினார். பின்னர் கனடாவுக்கு புலம்பெயர்ந்தவர் அங்கு பல அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். அத்துடன் பல அறிவியல் இதழ்களுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். (இறப்பு:-2006 டிசெம்பர் 2 ஆம் திகதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறிச்சுக்கட்டி முஸ்லிம் மக்களின் குடியிருப்பு மீது விசமிகள் தீ வைப்பு

## தண்ணீரைக்கூட எடுக்க விடாது அட்டகாசம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலக பிரிவிற்குட்ட மறிச்சுக்கட்டி மரைக்கார் தீவு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டில்கள் மற்றும் பொதுக் கட்டடம் என்பவற்றின் மீது இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.


இதன்போது 7 தற்காலிக கொட்டில்களும் ஒரு பொதுநோக்கு மண்டபமும் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இக்கிராமத்துக்குள் புகுந்த ஆயுதம் தரித்த கும்பல் சம்பவத்தை செய்ததாக அம்மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளையில் வந்த ஆயுததாரிகள் பல கொட்டில்களை அகற்றி வாகனத்தில் ஏற்றிய தாகவும் பின்னர் குடிசைகள் சிலவற்றிற்கு தீ வைத்துள்ளதாகவும் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

தீ வைப்பு சம்பவம் இடம்பெற்ற போது ஆயுததாரிகளிடம் அதனை செய்ய வேண்டாம் என்றும் தாங்கள் குடிப்பதற்கு வைக்கப்பட்டுள்ள தண்ணீரையாவது எடுத்து கொள்வதற்கான அனுமதியினை தாருங்கள் என்று மன்றாட்டமாக கேட்டபோது ஆயுததாரிகள் அனுமதியளிக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். தற்போது இக்கிராமத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து கேள்வியுற்றதும் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் ஆகியோர் கண்டித் துள்ளதுடன் பாதிக்கப்பட்டுள்ள மக்களுடன் உடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. (அ-2)

# விக்டோரியா நீர்த்தேக்கமும் நீர் இன்றி காணப்படுகிறது



(கொழும்பு)

மலையகத்தின் நீரேந்து பகுதிகளுக்கு குறித்த காலத்தில் மழை கிடைக்காத காரணத்தினால் மின்உற்பத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை சேமித்து வைத்து விநியோகிக்கும் பல நீர் தேக்கங்கள் நீரின்றி காணப்படுகின்றன.

மகாவலி கங்கையில் அமைக்கப்பட்டுள்ள விக்டோரியா நீர்தேக்கமும் நீரின்றி காணப்படுகின்றது. இந்த நீரின்றி காணப்படும் தரையில் வளர்ந்துள்ள சிறிய புற்களை உணவிற்கு பெற்றுக்கொள்ள அதிகளவிலான கால்நடைகள் இங்கு சுற்றித் திரிகின்றன.

இந்த விக்டோரியா நீர்த்தேக்கத்தினுள் அமிழ்ந்து போன பழைய கட்டடங்களின் இடிபாடுகள், பாலங்கள் என்பவற்றினை காண்பதற்காக அதிகளவிலான உல்லாசப்பயணிகள் மற்றும் கண்டி மஹியங்கனை வீதியில் பயணிப்பவர்கள் வந்து செல்கின்றனர். (அ-2)

# வவுனியா பேருந்து நிலையத்தில் காலை வேளைகளில் துர்நாற்றம்

## வாந்தி எடுக்கும் மக்கள்

(பூந்தோட்டம்)

வவுனியா பஸ் நிலையத்தில் காலையில் துர்நாற்றம் வீசுவதாகவும் இதன் காரணமாக பலர் வாந்தி எடுக்கும் நிலைக்கு தள்ளப்படுவதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதற்கான காரணம் தொடர்பாக அப்பகுதி வர்த்தகர்களிடம் கேட்டபோது, பஸ் நிலையத்திற்குரிய மலசலகூடம் ஒவ்வொருநாளும் காலை 7 மணிக்கு துப்பரவு செய்யப்படுவதாகவும் இதன் காரணமாக இவ்வாறான அசௌகரியமான நிலைக்கு பயணிகள் முதற்கொண்டு வர்த்தகர்களும் முகம் கொடுத்து வருவதாக தெரிவித்தனர்.

இந்நிலை குறித்து வவுனியா நகரசபையிடம் தெரிவித்த போதிலும் எவரும் கவனமெடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் மலசல கூடத்தின் கழிவுகளை மக்கள் குறைவான நேரமாகிய இரவு 7 மணிக்கு பின்னரோ அல்லது அதிகாலை 5 மணிக்கு முன்னரோ துப்புரவு செய்யும் பட்சத்தில் இவ்வாறான அசௌகரியமான நிலையை தவிர்க்கலாம் எனவும் தெரிவித்த அவர்கள் நகரசபை இது தொடர்பில் கூடிய கவனமெடுக்கும் என தாம் மேலும் நம்புவதாகவும் தெரிவித்தனர். (அ-9-266)

# கிழக்கு மாகாண தேர்தலில் விசேட அதிரடிப்படையினர்

## பாதுகாப்பு பணியில் தேர்தல் திணைக்களம்

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப்படையினர் நிலைநிறுத்தப்படவுள்ளனர்.

நேற்றைய தினம் முதல் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் பாகாப்பு கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

எதிர்வரும் 8 அம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களை முன்னிட்டு இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் கூட்டமைப்பில் அங்கம் வகித்துக் கொண்டே தனித்து போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக எம்.எல்.ஏ.எம்.அதாவுல்லாஹ் ஆதரவாளர்களுக்கும் ரவூப் ஹக்கீம் ஆதரவாளர்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தேர்தல்சட்டவிதி மீறல்கள் தொடர்பில் 300 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# கல்வியை பாதிக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழர் ஆசிரியர் சங்கம் போராடும்

வடக்கு, கிழக்கின் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்றால் அம்மாணவர்களுக்காக போராடவும் தயார் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அகில இலங்கை ரீதியிலான தாய் சங்க உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், வலய செயலாளர்கள், கோட்ட செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட சங்க கூட்டம் கடந்த திங்கட்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் இலங்கை தமிழர் சங்கத்தின் பொது செயலாளர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வடக்கு, கிழக்கின் கல்வி நடவடிக்கைகளில் கல்வியமைச்சு அசமந்தப் போக்கினை காட்டியதோடு பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகளை புறந்தள்ளி மாணவர்களின் கல்வியை மழுங்கடித்து வருகின்றது.

இதற்கு எதிராக நாம் கண்டனத்தினை தெரிவிப்பதோடு பல்கலைக்கழக ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்புக்கு நாம் ஆதரவினையும் தெரிவிக்கின்றோம். நாட்டின் கல்வி சீரழிந்து செல்கின்ற நிலையில் மாணவர்களின் நலன் கருதி கவனயீர்ப்பு போராட்டங்களிலும் ஈடுபட தயாராக உள்ளோம்.

எமது போராட்டங்கள் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பார்க்காமலேயே அமையும் என்றார். (அ-4)

# சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் இலங்கையில் நடத்த முடியும்

## விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சுமுக நிலை ஏற்பட்டுள்ள நிலையில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை இங்கு நடத்த முடியும் என விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இலங்கையை ஆசியாவின் விளையாட்டுப் போட்டிகளுக்கான கேந்திர நிலையமாக மாற்றும் திட்டம் ஒன்று தமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த போட்டிகளில் இலங்கையுடன் சில வெளிநாட்டு அணிகளும் பங்குகொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



நித்திலம் சிறுவர் கழக கலை கலாசார விழா கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் கோண்டாவில் இந்து மகா வித்தியால அதிபராக இருந்து யாழ்.கோட்டக்கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற எஸ்.சண்முககுமார் நித்திலம் சிறுவர் கழகத்தால் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

# உலக உணவு திட்டத்தால் வாய்க்கால்கள் சீரமைப்பு

(பூநகரி)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 200 மனித கூலிக்கான வேலைகள் நான்கு இடங்களில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சீர்செய்யப்படாதிருந்த குளத்தை அண்டிய வாய்க்கால்கள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

கமக்கார அமைப்பின் மேற்பார்வையின் கீழ் சின்னப்பல்லவராயன்கட்டுகுள வாய்க்கால், தின்னவேரிகுளவாய்க்கால், செம்பன் குண்டுகுள வாய்க்கால், பண்டார வாய்க்கால் ஆகியவற்றின் வேலைகளில் நூற்றுக் கணக்கான கிராம மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். (அ-2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

31



செங்கை ஆழியான்

## ஸ்ரீமேகவண்ணன்

தந்தையால் அழிக்கப்பட்டிருந்த பிரிவேனாக்கள், விகாரைகள் என்பவற்றினை முன்னையப் பொலிவோடு புனர்நிர்ணயம் செய்வித்தான். மகாசேனனால் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத திருப்



சதாதீஸ்ஸன், மகாசேனன், புத்ததாசன் ஆகிய மன்னர்களின் சிலை

பணியான ஜேத்தவன விகாரையைக் கட்டி முடிப்பித்தான். அத்தோடு தன் ஆட்சிக்காலத்தில் தானே பதினெட்டு விகாரைகளை நிறுவியதாகவும் தெரிகிறது. இலங்கைக்குப் பௌத்த தர்மத்தினை எடுத்துவந்த மகிந்த தேரரின் உருவைத் தங்கச் சிலையாக வடிப்பித்து, அம்பத்தலசேத்தியத்தில் நிறுவினான். அதனைப் பெரியதொரு விழாவாகக் கொண்டாடினான்.

ஸ்ரீமேகவண்ணனின் ஒன்பதாவது வருடத்தில் ஒரு பிராமணப் பெண் துறவி, கலிங்கதேசத்திலிருந்து அனுராதபுரத்திற்கு புத்தரின் தந்த தாது ஒன்றினை எடுத்து வந்தாள். அதனை மன்னன் வெகு கௌரவத்தோடு ஏற்று, அதற்கென ஒரு கோயிலை தலைநகரில் அரண்மனைக்கு அருகாக அமைத்தான். இதுவே பின்னர் தந்ததாதுக் கோயில் எனப் புகழ்பெற்றது. அனுராதபுர நகரில் தென்கிழக்குப் பாகத்தில் இந்தத் தலதாமாளிகை அமைந்திருந்தது. இதனைப் பாதுகாக்கும் பொறுப்பினை அபயகிரி விகாரையினரிடம் ஒப்படைத்தான். வருடா வருடம் அபயகிரி விகாரைக்கு இத்தந்தாது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் தரிசனத்திற்கு வைக்கப்பட்டது. ஸ்ரீமேகவண்ணன் காலத்திலிருந்தே ஒரு முக்கிய வழிபாட்டுச் சின்னமாக இருந்து வருகின்றது. ஸ்ரீமேகவண்ணனின் ஆட்சி கி.பி 352- கி.பி 379 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

ஸ்ரீமேகவண்ணன் காலத்தில் குப்தப் பேரரசு சிறப்புற்று விளங்கியது. அப்பேரரசின் மன்னனாக விளங்கிய சமுத்திரகுப்தன் இலங்கை மன்னனோடு இராயதந்திரத் தொடர்புகளை கொண்டிருந்தான். அவன் காலத்தில் இந்தியாவிலிருந்த புத்தகாயாவில் போதிமரம் இருக்கின்ற இடத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்காக ஒரு மடத்தை நிறுவி கொடுத்துள்ளான்.



பண்டுகாபயன், ஜெட்டதீசன் ஆகிய மன்னர்களின் சித்திரம்

ஸ்ரீமேகவண்ணனை அடுத்து ஆட்சியை ஏற்றவன் ஜெட்டதீசனாவான். (379-388) அவன் ஸ்ரீமேகவண்ணனின் சகோதரனின் கடைசி மகனாவான். யானைத் தந்தங்களினால் சிற்பங்கள் செய்வதில் இவன் புகழ் பூத்திருந்தான். முன்னைய மன்னனின் வேண்டுகோளின்படி போதிசத்துவருக்கு உருவச் சிற்பம் அமைத்து, ஒரு அலங்கார மண்டபத்தில் நிறுவினான். ஒன்பது ஆண்டுகள் இலங்கையை பரிபாலித்த பின்னர், தனது மகன் புத்ததாசனிடம் அரியணைய ஒப்புவித்து மரணமானான்.


### புத்தாசனம்

புத்தாசனம் நல்லியல்புகளையுடைய ஒரு மன்னன், நற்பண்புகளை அணிகலன்களாகக் கொண்ட புத்ததாசன், போதிசத்துவ வழிபாட்டையும், வாழ்க்கை நெறிகளையும் கைக் கொண்டு மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கினான். மருத்துவக் கலையில் வல்லுனனாகவிருந்தமையால் தன் குடிகளுக்கும் உயிரினங்களுக்கும் சிகிச்சைகள் புரிந்து குணப்படுத்தினான். அவனின் மருத்துவ அறிவை விளக்கும் பொருட்டு நம்பகமற்ற கதைகள் பலவற்றினை சூளவம்சம் கூறுகின்றது.

ஒரு நாள் தன் யானையில் ஏறி, திஸ்ஸவாவியில் நீராடும் நோக்கோடு வந்து கொண்டிருந்தபோது, புத்தகாயா விகாரைக்கு அருகில், ஒரு கறையான் புற்றின் மேல், வயிற்று நோயால் (நாகரோகம்) பாதிக்கப்பட்டு, வயிறு வீங்கிய பெரிய சர்ப்பம் ஒன்று கிடந்தது. அதனைச் சுகப்படுத்த விரும்பிய மன்னன், யானையை விட்டு இறங்கி அதன் அருகில் வந்து, சர்ப்பமே உனது நோயை ஆற்ற விரும்புகிறேன். ஆனால், நீயோ என்னைத் தீண்டி விடலாம் என அஞ்சுகிறேன் என்று கூறினான். அதனைச் செவிமடுத்த சர்ப்பம் தன் தலையைக் கறையான் புற்றுக்குள் நுழைத்துக் கொண்டு வயிற்றுப் பகுதியை மட்டும் வெளிக்காட்டியது. மன்னன் கத்தியால் அதன் வயிற்றில் கீறி அறுவை செய்து சீழ் முதலானவற்றை வெளிப்போக்கி, மருந்திட்டுக் கட்டிவிட்டான். சர்ப்பத்தின் நோய் தீர்ந்தது. அதற்குப் பரிசாக அச்சர்ப்பம் தனது நாகமணியை மன்னனுக்கு வழங்கியது. மன்னன் அதனை அபயகிரி விகாரையின் புத்த சிலையின் ஒரு விழியாகப் பதிப்பித்தான்.

துவத்தி என்ற நகரத்தில் தானமாக வழங்கிய சிறுபுழுக்கள் கொண்ட பாலை அறியாமல் பிக்கு ஒருவர் அருந்திவிட்டார். கடும் வயிற்று நோயால் மன்னனிடம் தஞ்சம் புகுந்தார். புத்ததாசன், காயப்பட்டிருந்த குதிரையொன்றிலிருந்து எடுத்த குருதியை அப்பிக்குவிடம் மருந்தெனக் கூறி அருந்த வைத்தான். பிக்கு அருந்தியதுடன், அவர் குடித்தது குதிரையின் இரத்தம் என எடுத்துரைத்ததும் பிக்குவானவர் ஓங்களித்து வயிற்றுலுள்ள அனைத் தையும் சத்தியாக வெளியேற்றினார். அவர் வயிற்றிலிருந்த பாற்புழுக்களும் வெளித்தள்ளப்பட்டன. அவர் சுகமடைந்து மன்னனிற்கு நன்றி தெரிவித்தார்.

நீர்ப்பாம்பு ஒன்றின் முட்டையையும் சேர்த்து நீர் அருந்திய ஒரு மனிதனின், வயிற்றினுள் நீர்ப்பாம்பு விரைவாக வளர்ந்து அவனை வருத்தியது. அவனை மன்னன் ஒரு படுக்கையில் குப்புறப்படுக்க வைத்தான். வாயைத் திறந்த நிலையில் வைத்திருக்கப் பணித்த பின்னர், வாட்டிய இறச்சித் துண்டொன்றினை திறந்த வாயருகில் வைத்தான். இறைச்சியின் மணத்தால் கவரப்பட்ட நீர்ப்பாம்பு, வேகமாக வாயினூடாக வெளிவந்தது. இவ்வாறு மருத்துவக் கலையில் புத்ததாசன் சிறந்து விளங்கினான் என சூளவம்சம் பெருமைப்படும். அருந்திய நீருடன் உடலினுள் புகுந்த தவளை முட்டை, வாயினூடாக மண்டை ஓட்டிற்கு புகுந்து, தவளையாக வளர்ந்துவிட்டது. புத்ததாசன் அந்த மனிதனின் கபாலத்தைத் திறந்து,



மட்டக்களப்பு, திருகோணமலைக்கு இடையில் காணப்பட்ட 8 ஆம் நூற்றாண்டுக் காலத்திற்குரிய போதிசத்துவத்தாரா வெண்கலச்சிலை

தவளையை வெளியே நீக்கிவிட்டு, பழையவாறு கபாலத்தை மூடித் தைத்து விட்டான் எனவும் சூளவம்சம் கதைவிடுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களை இல்லாதொழிப்போம்

கடந்த வாரத் தொடர்ச்சி.......

✧ மனச்சோர்வு

பாலியல்துஷ்பிரயோகத்தினால் ஏற்பட்டபாதிப்புகள் நீண்டகாலகமாகக் காணப்படும் போது அது மனச்சோர்விற்கு இட்டுச் செல்லும்.

✧ தற்கொலை

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான ஒரு பிள்ளை தனது வாழ்வே கேள்விக்குறியதாகி விட்டது. எதிர்காலத்தில் தனக்கு ஒன்றுமே இல்லை என்று மனதளவில் உணரும் போது தற்கொலை முயற்சிக்கு முற்படலாம். இத்தகைய துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கும் நிரந்தரமாகத் தப்பித்துக் கொள்வதற்கும் தற்கொலை ஒன்றே முடிவு எனத் தவறாக நினைத்துத் தற்கொலை மூலம் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

✧ எதிர்காலத்தில் துஷ்பிரயோகியாக மாறுதல்

சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி மீண்ட ஒருவர் அல்லது ஒருத்தி பாலியல் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக வேறு ஒரு சிறுவனையோ சிறுமியையோ பாலியல் உறவிற்கு ஈடுபடுத்துகின்றனர். இதை இவர்கள் தமது சொந்த அனுபவத்தினூடாக அறிந்து கொள்கின்றனர். இதனால் துஷ்பிரயோகத்திலிருந்து மீண்டவர்கள் எதிர்காலத்தில் தாமும் துஷ்பிரயோகியாக மாறுவதற்கான சாத்தியங்களும் உண்டு.

✧ பாலுறவில் வெறுப்பு

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்களில் சிலர் அளவுக்கதிகமான பாலியல் நடத்தைகளில் விருப்பதுடன் ஈடுபடும் அதேவேளை வேறு சிலர் தமக்கு நடந்த கசப்பான அனுபவங்களின் காரணமாக பாலுறவுச் செயற்பாட்டையே வெறுக்கின்றனர். இதனால் இவர்களது எதிர்கால வாழ்வில் தமது துணையுடனான பாலுறவுச் செயற்பாட்டை நிராகரிக்கின்றனர். இதனால் ஏற்படும் மனமுறிவு மணமுறிவிற்கும் இட்டுச் செல்லும்.

### பாலியல் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வழிமுறைகள்

✷ விழிப்புணர்வை ஏற்படுத்தல்

சிறுவர்கள் தாங்களாகவே தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதனைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறுவர் தொடர்பாகப் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களும் மேற்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்கு நல்ல தொடுகை எவை, கூடாத தொடுகை எவை என்பதை தெளிவாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். எவரேனும் ஒருவர் பிள்ளைக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் விதத்தில் பிள்ளையை வருடும் போதும் தொடும்போதும் என்ன செய்ய வேண்டும்?, அவ்வாறு தொடும்போது பிள்ளைகள் காட்ட வேண்டிய எதிர்ப்பு நடவடிக்கைகள் எவை என்பவற்றை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும், அறிமுகம் இல்லாத நபர் ஒருவர் தரும் அன்பளிப்புக்களை நிராகரிக்க வேண்டும், பெற்றோரின் அனுமதியின்றி எவற்றையும் வாங்கக் கூடாது என்பதெல்லாம் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

பாலியல்துஷ்பிரயோகத்திற்குப்பிள்ளையை உள்ளாக்க முற்படும் சமயத்தில் உதவி கோரிக் கூச்சலிடுவதற்கு, அந்த இடத்திலிருந்து விரைவாக நீங்கிச் செல்ல அல்லது ஓடித் தப்பிச் செல்வதற்கு தாம் நேசிக்கும் ஒருவருக்கு அதுபற்றிச் சொல்லுவதற்குப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு மட்டுமன்றிப் பெற்றோருக்கும் பிள்ளைகளின் உரிமைகள் பற்றியும் பிள்ளைகள் தொடர்பான சட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவமொன்று இடம்பெற்றால் பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், யாரை அணுக வேண்டும் என்பது பற்றியும் பெற்றோருக்குத் தெளிவுபடுத்த வேண்டும். பிள்ளைகளை யாரேனும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியிருந்தால் அது குறித்து பின்வருவோருக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.

➢ வீட்டில் – பெற்றோருக்கு அல்லது உறவினருக்கு

➢ பாடசாலையில் –ஆசிரியருக்கு

➢ சமூக மட்டத்தில் –கிராம சேவையாளருக்கு

➢ பிரதேச செயலர் பிரிவில் –

✷ சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்

✷ சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்

➢ மாவட்ட மட்டத்தில் – மாவட்ட செயலகத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின்

✷ மாவட்ட இணைப்பாளர்

✷ மாவட்ட உளசமூக இணைப்பாளர்

✷ மாவட்ட இணைப்பாளர்- சிறுவர் உரிமை

➢ தேசிய ரீதியில் – தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 24 மணி நேர இலவச தொலைபேசி அழைப்பு 1929.

சிறுவர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை உறுதியாகத் தெரிந்திருப்பின் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ வைத்தியசாலைக்கோ செல்லுதல் அவசியமானதாகும். மிக முக்கியமாகத் துஷ்பிரயோகத்தின்போது அணிந்திருந்த ஆடையுடன் செல்ல வேண்டும். குறித்த பிள்ளை உடனடியாகச் சட்ட மருத்துவ அதிகாரியினால் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். சட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். குறித்த பிள்ளையின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். குற்றம் புரிந்த நபர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவருக்குத் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். சிறுவர் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியமை சட்டத்தினால் நிரூபிக்கப்படுமாயின் குறித்த நபருக்கு இருபது வருட சிறைத் தண்டனை வழங்கப்படும். அண்மைக்காலங்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென பல்வேறுபட்ட தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

**கு.கௌதமன்**
மாவட்ட உள சமூக இணைப்பாளர்.
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.
யாழ். மாவட்ட செயலகம்.

இன்றைய சிறுவர்கள் நாளை தலைவர்கள். எதிர்காலச் சமுதாயத்தைச் செதுக்குகின்ற சிற்பிகள். இத்தகைய இளம்மொட்டுக்களை பாலியல் துஷ்பிரயோகத்தின் மூலம் சிதைக்கும் நிலை அண்மைக்காலமாக அதிகரித்து வருவது வேதனைக்குரிய விடயமாகும். எனவே, இத்தகைய நிலை இல்லாத சமுதாயத்தை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும். சிறுவர்களைத் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பது பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் அரச அதிகாரிகளினதும் சமூக நலன் விரும்பிகளினதும் கடமையாகும். இதனை உணர்ந்து செயற்பட வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும். (முற்றும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கண்டங்கத்தரியும் வட்டுக்கத்தரியும்

### கண்டங்கத்தரி

**Botanical Name-**
**Solanum xanthocarpum**
**Family-Solanaceae**
**Sinh-Katuwel-batu**

இக்கொடி சுமார் 100 செ.மீ. தூரம் வரைக்கும் நன்கு அடர்த்தியாக தரையோடு ஒட்டிப் படரும். நல்ல அழுத்தமுள்ள கொடிகளில் சுமார் 6-12 செ.மீ. நீளமும் 3.6 செ.மீ. அகலமுமுள்ள இலைகள் நெருக்காக இருக்கின்றன. இலையின் இரு புறங்களிலும் கொடி, காம்பு ஆகிய எல்லாவற்றிலும் சுமார் 1 செ.மீ. நீளமுள்ள முட்கள் ஏராளமாக நிறைந்திருப்பதை காணலாம்.

பூக்கள் கத்தரிப்பூவின் உருவத்தையும் நிறத்தையும் பெற்றுள்ளன. அதாவது 5 பிரி



வாகத் தோன்றும். ஒரே இதழையுடைய பூ ஊதா (Violet) நிறமுடையது. வட்டவடிவ காயின் சாம்பல் நிறத்தோலில் பல பச்சை நிறக் கோடுகள் தாறுமாறாக ஓடியிருக்கும். விதைகள் அதிகமுள்ள பழம் மஞ்சள் நிறமானது. இது ஒரு வருடம் வாழக்கூடியது.

#### பரம்பலும் இனவிருத்தியும்

மணல் மண் கலப்புள்ள பிரதேசங்களில் பரம்பல் அதிகம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைகளை தூவிமுளைத்து வந்த கன்றுகளை மீற்றருக்கு ஒன்றாக நட்டு வளர்க்கலாம். கன்றுகள் முளைத்து 3 1/2 தொடக்கம் 4 மாதங்களில் அறுவடை செய்யலாம்.

#### மருத்துவ குணங்கள்

சிறிது கசப்பும் விறுவிறுப்பும் கொண்டது. சிறிது அழுத்தமுள்ள சக்கை கொஞ்சம் அதிகமெனலாம். நீர் அதிகமில்லை. 8, 10 கிராம் இலைச் சாற்றை தக்க அனுமானத்தோடு உண்ணலாம். 1/2 தேக்கரண்டி தூளை மோருடன் உண்ணலாம். இலையுடன் பூக்களையும் சேர்த்து உபயோகிக்கலாம். காய், பழங்களை சமைத்தும் வற்றல் போட்டும் உண்ணலாம். முக்கியமாக இருமல், ஆஸ்துமா, நுரையீரல் சம்பந்தமான மார்புவலி, காய்ச்சல் இவற்றிற்கு சிறந்த மூலிகையாகும்.

✷ 25 கிராம் கண்டங்கத்தரி வேரை பொடியாக்கி 1/4 லீற்றர் தண்ணீரில் கொதிக்க வைத்து 50 மில்லியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி தேனில் கலந்து 7 நாட்கள் காலையில் சாப்பிட்டு வர இருமல் குணமாகும்.

✷ கண்டங்கத்தரி இலையின் சாறு 1/2 மேசைக் கரண்டி, தூதுவளை இலைச்சாறு 1/2 மேசைக் கரண்டி இரண்டையும் கலந்து ஒரு டம்ளர் காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து காலையில் மட்டும் தொடர்ந்து 7 நாட்கள் பருகி வர ஆஸ்துமா குணமாகும்.

✷ இதன் வேரை நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி குடிநீர் காய்ச்சி 30 மில்லி குடிநீருடன் ஒரு கிராம் திப்பிலிச் சூரணம் சேர்த்து தேனில் காலை, மாலை கொடுக்க இருமல், பீனிசம் குணமாகும்.

✷ உடலை வருத்தி வேதனை உண்டு பண்ணி பெரும் வாதக் காய்ச்சலுக்கு கண்டங்கத்தரி வேர், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு ஒரேயளவாக எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30-60 மில்லி அளவு தினமும் 3 வேளை அருந்த காய்ச்சல் குணமாகும். சிறுநீரும் நன்கு வெளிப்படும்.

✷ கண்டங்கத்தரி வேர் 10 கிராம், சுக்கு (வேர்க்கொம்பு) 2 கிராம், சீரகம் 1 கிராம், கொத்தமல்லி 2 கிராம் சேர்த்து கசாயம் செய்து 60 மில்லி அளவு சாப்பிட நுரையீரல் பற்றிய காய்ச்சல் குணமாகும்.

✷ கண்டங்கத்தரி வேர் ஆடாதோடையிலை, விஷ்ணு கிராந்தி, பற்படாகம், சீரகம், சுக்கு சம அளவு எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லியளவு அருந்த சளி, தொடர்ச்சியான இருமல், உடலில் ஏற்படும் கணகணப்பு தீரும். ஆடாதோடை வேர் கண்டங்கத்தரி வேர் இரண்டும் ஒரேயளவாக எடுத்து கழுவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். இதில்

#### முக்கியகுறிப்பு

கண்டங்கத்தரி மூலிகையானது அந்நிய செலாவணியை ஈட்டித்தரக்கூடிய மூலிகை ஆகும். ஆகவே யாழ்.மாவட்டத்தில் மணல்மண் பிரதேசமுள்ள வடமராட்சி மற்றும் குடத்தனை, நாகர்கோவில், கிராஞ்சி போன்ற இடங்கள் இப்பயிர்ச் செய்கைக்கு உகந்த பிரதேசங்களாகும்.

இதனுடைய தண்டு இலைகளை குடிநீரிட்டு வலிப்பு நோயாளிகளுக்கு கொடுக்கலாம். இதனுடைய முதிர்ந்த பழங்களை கறிசமைத்து அல்லது வற்றலாக்கி சாப்பிட குடல் சுத்தப்படுவதுடன் குடலிலுள்ள பூச்சிகளை அழிக்கும் ஆற்றல் உள்ளது.

கண்டங்கத்தரி அல்லது வட்டுக்கத்தரியின் முதிர்ந்த பழங்களை சுட்டு அதிலிருந்து வெளிப்படும் புகையை பற்கொதியுள்ள இடத்தில் படுமாறு செய்ய பற்கொதி குணமாகும்.

எனவே இரு மூலிகைகளையும் இனங்கண்டு சாதாரணமான நோய் நிலைமைகளில் மேற்குறிப்பிட்ட குறிப்புகளுடன் பயன்படுத்தி வருதல் அவசியமாகும்.

அத்துடன் கண்டங்கத்தரியானது மிகவும் முக்கியமானதும் விலை அதிகமானதுமான மூலிகையாகவும் குறுகிய கால (4 மாதம்) அறுவடைக்காலத்தை கொண்டிருப்பதால் விவசாயிகள் எமது பிரதேசத்தில் உகந்த மண்வளத்தைத் தெரிவு செய்து பயிரிடலாம்.

### வட்டுக்கத்தரி

**Botanical Name-**
**Solanum Surattense**
**Family-Solanaceae**
**Sinh-Ela-batu**

இது பல்லாண்டு வாழக்கூடிய செடியாகும். 30-90 செ.மீ. உயரம் வளரக்கூடியது பல கிளைகளை கொண்டிருக்கும். நேரான மஞ்சள் நிற முட்களை கொண்டிருக்கும். தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டிருக்கும். கோள வடிவானது. இலையின் அடிப்பகுதி சமச்சீரற்று காணப்படும். இலையின் பின்பக்கத்தில் நேரான முட்கள் காணப்படும். இரு பாலான



பூக்கள். இலையும் ஊதா நிறம் கொண்டவை. மஞ்சள் நிற பழங்கள் பச்சைநிற கோடுகளை

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம் கைதடி**

கொண்டிருக்கும். நிறைய விதைகளை கொண்டது. வருடம் பூராவும் பூக்கக்கூடியது. வட்டுக் கத்தரியின் பரம்பல் கண்டக் கத்தரியுடன் ஒப்பிடும்போது வரண்ட பிரதேசத்தில் அதிகம் காணப்படும்.

இதனுடைய வேரானது உடலை பலப்படுத்தக்கூடியதும் நரம்புகளை பலப்படுத்தக் கூடியதுமான குடிநீரில் சேருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதியின் லைட் மசகுஎண்ணெயால் சபுகஸ்கந்த பழுதடைந்ததாம்

## பெற்றோலியத்துறை அமைச்சு விபரிக்கிறது

(கொழும்பு)

சவுதிஅரேபியா லைட் மசகுஎண்ணெய் பயன்படுத்தியதாலேயே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தொழில்நுட்பகோளாறு ஏற்பட்டு சுத்திகரிப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை பெற்றோலியத்துறை அமைச்சு நிராகரித்துள்ளது.

அவ் அமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

கப்பலில் இருந்து கொழும்பு துறைமுகத்தினூடாக எரிபொருளை விநியோகிக்க பயன்படுத்தும் குழாயில் ஏற்பட்ட திடீர் திருத்தம் காரணமாகவே சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் 3 தினங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளன.

திருத்தப் பணிகள் நிறைவடையும் வரை சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு எதுவும் கிடையாது.

தற்பொழுது கொழும்பு துறைமுகத்தில் ஒரு இலீட்சத்து 35 ஆயிரம் தொன் மசகு எண்ணெயுடன் கப்பலொன்று நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் திருத்தப்பணிகள் முடிவடைந்த உடன் இவை சபுகஸ்கந்தவுக்கு குழாய் மூலம் அனுப்பப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஈரானுக்கு எதிராக பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் சவுதி அரேபியாவில் இருந்து லைட் மசகு எண்ணெயையும் ஓமானில் இருந்து மசகு எண்ணெயையும் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினூடாக ஈரான் மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படுகிறது. சவுதிஅரேபிய லைட் மசகு வேறு வகை மசகு எண்ணெய்களுடன் கலந்து வருடாந்தம் சுத்திகரிக்கப்படுகிறது. சவுதி அரேபிய மசகு எண்ணெய் சுத்திகரிப்பினால் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் கோளாறு எதுவும் ஏற்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது. எரிபொருள் குழாய் திருத்தப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## உரமானியப் பதிவுகள்

(துனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட விவசாயிகளுக்கான 2012, 2013 காலபோக நெற் செய்கைக்கான உரம் வழங்குவதற்கான உரமானிய விண்ணப்பப்படிவம் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை மறவன்புலோ பொதுநோக்கு மண்டபத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் குறித்த திகதிகளுக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அதற்கு பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் தெரிவித்துள்ளார். (அ-3-37)

## சுகாதார மேம்பாட்டு செயலமர்வு 8 ஆம் திகதி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சுகாதார கழகத்திற்கு பொறுப்பாக உள்ள ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டு செயலமர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்விற்கு சுகாதார கழகத்திற்கு பொறுப்பான ஆசிரியரையும் இடைநிலைப்பிரிவில் கல்வி கற்பிக்கும் இரு ஆசிரியர்களையும் குறித்த நேரத்திற்கு முன் சமுகமளிக்க ஏற்ற ஒழுங்குகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (அ-3-15)

# தனியார் கல்வி நிலையங்களே பிரச்சினையை தோற்றுவிக்கின்றன

## பரீட்சை ஆணையாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தனியார் வகுப்புகள் தான் முற்றுமுழுதாக உதவுகின்றன எனப் பொய்யான தகவல்களை வழங்கி மாணவர்களை திசை திருப்பும் தனியார் கல்வி நிறுவன வகுப்புளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த தனியார் கல்வி நிறுவனங்கள் தாம் கற்பித்த விடயங்கள் பரீட்சையில் உள்ளடக்கப்படவில்லை என குற்றம் சுமத்தி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முடக்குகின்றன.

இவ்வாறு பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வரும் தனியார் கல்வி நிறுவனங்களை இல்லாதொழிக்கும் அதிகாரம் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்துக்கு உண்டு.

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் குழப்ப நிலைகள் ஏற்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த குற்றச்சாட்டுக்களுக்கு தனியார் வகுப்புகளே காரணம். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் பாடசாலை பாடத்திட்டங்களுக்கு அமையவே தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும் தனியார் வகுப்புக்களில் பாடத்திட்டங்களுக்கு அப்பால் சென்று கற்பிக்கப்பட்ட பாடங்கள் காரணமாகவே பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றார். (அ-9)




மட்டக்களப்பில் 19.3 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள விமான நிலைய புனரமைப்பு பணிக்கான ஆரம்ப நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவ் ஆரம்ப நிகழ்வில் விமான நிலைய மாதிரிப்படத்தை பார்வையிடுவதையும் அருகில் பிரதி அமைச்சர் வி.முரளிதரன் உள்ளிட்டோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# அமைச்சர் ஜி.கே.வாசனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## அனுமதி கோருகிறார் சுவாமி

(கொழும்பு)

இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசனுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க அனுமதி தருமாறு ஜனதாக்கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி இந்திய பிரதமரிடம் கோரியுள்ளார்.

தமிழகத்தில் பயிற்சி பெறும் இரண்டு இலங்கை இராணுவ வீரர்களை திருப்பியனுப்புமாறு வாசன் இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தமையை கொண்டே இந்த கோரிக்கையை சுப்பிரமணியன் சுவாமி இந்திய பிரதமரிடம் விடுத்துள்ளார்.

இலங்கையின் இராணுவ வீரர்கள் இருவர் தமிழகத்தில் பயிற்சி பெறுவது குறித்து தமிழகத்தின் அரசியல் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டன. இந்த நிலையில் மத்திய துணைஅமைச்சர் பல்லம் ராஜு இலங்கை படையினருக்கான பயிற்சிகள் இந்தியாவில் தொடரும் என்று அறிவித்திருந்தார்.

இதனை மீண்டும் தமிழக கட்சி தலைவர்கள் ஆட்சேபித்திருந்தனர். இதனையடுத்து ஒருதுணை அமைச்சரான ஜி.கே. வாசன் இலங்கை படையினர் தமிழக பயிற்சிகளில் இருந்து திருப்பியனுப்பப்படுவர் என்று அறிவித்திருந்தார்.

இந்த கருத்தை எதிர்த்துள்ள சுப்பிரமணியன், அமைச்சர் வாசன் இந்திய மத்தி அரசாங்கத்தின் அமைச்சரவை பொறுப்பை முழுமையாக மீறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்க போதுமானளவு சட்டவாக்கங்கள் உள்ளதாகவும் சுப்பிரமணியன் சுவாமி குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாம் அவுஸ். செல்லவேண்டும்; எரிபொருள் நிரப்பி தாருங்கள்

## இந்தோ.அதிகாரிகளிடம் அகதிகள் மன்றாட்டம்

(கொழும்பு)

மேற்கு இந்தோனேசியாவில் எரிபொருள் தீர்ந்த நிலையில் நிற்கும் கப்பலில் இருந்து வெளியேற 53 இலங்கை அகதிகளும் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தமது கப்பலுக்கு எரிபொருளை நிரப்பி தருமாறும் தாம் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல வேண்டும் என்றும் குறித்த அகதிகள் கோருவதாக இந்தோனேசிய பொலிஸ் கப்டன் அப்துராச்சமான் சுர்யாங்கேரா தெரிவித்துள்ளார்.

இந்த கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமாத்திரா தீவுக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் வைத்து இந்தோனேசிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டது.

குறித்த கப்பலில் உள்ள அகதிகள் தமக்கு உணவு எரிபொருள் மற்றும் நீரை பெற்றுக் கொள்வதற்காக தங்கம் மற்றும் நகைகளை கொடுப்பதற்கு தயாராக உள்ளதாக இந்தோனேசிய கடற்படையினருக்கு தகவல் கிடைத்தமையை அடுத்தே அவர்கள் அதனை இடைமறித்தனர்.

இதனையடுத்து அக்கப்பல் இந்தோனேசியாவின் மேற்கு துறைமுகம் ஒன்றுக்கு கொண்டு வரப்பட்டது. இதேவேளை 43 பேரை கொண்ட மற்றும் ஒரு இலங்கை அகதிகள் கப்பல் கடந்த வாரம் மெண்டாவை என்ற பகுதியில் வைத்து இந்தோனேசிய கடற்படையினரால் காப்பாற்றப்பட்டது.

இதில் பயணித்தவர்கள் 9 நாட்களாக உணவு மற்றும் நீர் இன்றி தத்தளித்ததாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழம் நோக்கி வாருங்கள்..!

## மரணத்துடன் போராடி மீண்ட மனிதரின் கதைகளை நாம் கேட்கவேண்டும் !

போரின் பின்னரான சூழலில் காணப்படுகின்ற இன்னுமொரு முக்கியமான பிரச்சினை பெற்றோரில்லாத குழந்தைகள். இப்பொழுது சிறுவர் இல்லங்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் அதிகமாக இருக்கிறது மட்டக்களப்பில் மட்டும் 75 இற்கு மேற்பட்ட சிறுவர் இல்லங்கள் செயற்படுகின்றன. ஒவ்வொன்றிலும் முன்று நான்கு வயதுகளிலிருந்து 16 வயது வரையிலான பிள்ளைகள் குறைந்தது 30 பேராவது இருக்கின்றார்கள். பலருக்கு பெற்றோரில்லை, சிலருக்கு பெற்றோர் இருந்தும் இக்குழந்தைகளை வளர்ப்பதற்கான பொருளாதார வசதிகள் இல்லை, சிலருக்கு தந்தை இல்லை. ஆயினும் தாயாருக்கு தனித்துக் காப்பாற்றக் கூடிய பொருளாதார வசதிகள் இல்லை; அனேகமான தாய்மார் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருப்பர், மரணமடைந்த அல்லது கொலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் குழந்தைகள், எனப் பல காரணங்களினால் குழந்தைகள் அநாதைகளாக இந்த இல்லங்களில் வாழ்கின்றனர். இந்த இல்லங்களைப் பராமரிப்பவர்கள் சிலர் நல்ல உள்ளம் படைத்த வர்களாக இருக்கின்றனர். சிலர் வியாபார நோக்கம் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். எவ்வாறிருந்த போதும் குழந்தைகளை வளர்ப்பது தொடர்பான பரந்த, ஆழமான அறிவற்றவர்களாக அக்கறையற்றவர்களாக இருப்பதையும் அறியக் கூடியதாக இருந்தது. ஆகவே இந்த இல்லங்களில் வாழ்கின்ற குழந்தைகளுக்கு சரியான வழிகளில் உணவு, உடை, கல்வி என்பன கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டியுள்ளது. இந்த இல்லங்களில் தொழில் புரிகின்றவர்களுக்கு குழந்தைவளர்ப்பு தொடர்பான முறையான தொழிற்பயிற்சியும் வளங்க வேண்டியது முக்கியமானதும் அவசியமானதுமாகும்.



இவ்வாறான பிரச்சினைகளை விட போரினால், ஏற்பட்ட பாதிப்புகள், இழப்புகள், அனுபவங்கள் என்பவற்றினால் பல்வேறு வகைகளில் அனைவரும் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் இரு பிரிவினர்கள் உள்ளனர். ஒரு வகையினர் போரினால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள், மற்றவகையினர் போரில் பங்குபற்றிய முன்னாள் போராளிகள். இவர்கள் அனைவரும் போரினாலும் அதன்பின்னான இராணுவத்தினர் நிலை கொண்டுவள சூழல்களினாலும் பல வகைகளில் பாதிக்கப்பட்டவர்கள். இருப்பினும் வேறு வேறான மன நிலை பாதிப்புகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இவர்களது முரண்பட்ட மனநிலைகளை மாற்றி பொதுவானதும் ஆரோக்கிய மானதுமான மனநிலையை உருவாக்குவதன் மூலம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முயற்சிக்க வைக்கின்றமை முக்கியமான செயற்பாடாகும். இதுவே இவர்கள் மீண்டும் தமது குடும்பங்களுடன், உறவுகளுடன், சமூகங்களுடன் இணைந்து வாழ வழிவகுக்கும். இதற்காக இவர்களுக்கு பலவிதமான உளவியற் பயிற்சிகளும் தியான வழிப் பட்டறைகளும் ஒழுங்கு செய்யலாம். துரதிஷ்டவசமாக வடக்கு - கிழக்குபகுதிகளில் உளவியல் வைத்தியர்கள் ஒருசிலர் மட்டுமே செயற்படுகின்றனர் என அறிய முடிகின்றது. ஆகவே புலம்பெயர்ந்து வாழ்கின்ற இத்துறைசார்ந்த நிபுணர்கள் இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதில் அக்கறை காண்பிக்கலாம். மேற்குறிப்பிட்ட பல்வேறு வகையான செயற்றிட்டங்களை வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இருக்கின்ற சமூக அக்கறையுள்ளவர்கள் சிலர் சிறிய குழுக்களாக இணைந்தோ அல்லது தனி மனிதர்களாகவோ முன்னெடுத்துச் செயற்படுகின்றனர். இவர்கள் தமது திட்டங்களை பல்வேறு உதவிகள் மற்றும் வழிகளுக்கூடாக சிறிய அளவில் முன்னெடுக்கின்றனர். ஆனால், இவர்களுக்கு ஆட்பலம் , நிதிப்பலம், புலமைத்துவ அறிவுப்பகிர்ததல்கள், தொழில் நிபுணத்துவ வழிகாட்டல்கள் என்பவற்றில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன. புலம் பெயர்ந்த மனிதர்கள், தம் தேசத்தை மீட்டெடுக்க விரும்பி இப் பிரதேசங்களுக்குச் சென்று சிறிது காலம் வாழ்வதனூடாக இவ்வாறான குழுக்களின் அறிமுகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்களிடமிருந்து நேரடியாகவே அவர்களது பிரச்சினைகள் தேவைகள் என்ன என்பதையும் அறிந்து கொண்டு தம்மால் செய்ய முடிந்த பங்களிப்புகளை செய்யலாம். ஆனால், எத்தனைபேர் இதற்கு முன்வருவோம்?

இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு பணம் எங்கே என அனைவரும் கேட்கலாம். ஏற்கனவே ஈழத்தமிழருக்காக சேகரிக்கப்பட்ட நிதிகள் முடக்கப்பட்டுள்ள வழிகளை கண்டுபிடித்து அவற்றை மேற்சொன்ன பங்களிப்புக்குரியவையாக மாற்ற முடியுமா என ஆராய்ந்து பார்க்கலாம்.

மேலும் இந்த நிதிவளங்களை நாம் பொதுவான ஒரு நிறுவனத்தினூடாகவும் கணக்கு வழக்குகளில் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்கின்ற, பயன்படுத்துகின்ற வழிமுறைகளை உருவாக்கி பின்பற்றலாம். சில வேலைத்திட்டங்களை அங்கு (இலங்கை) அதிகாரத்திலிருக்கின்றவர்களின் அனுமதி பெற்றே செய்யவேண்டியிருக்கிறன்றமை துரதிஷ்டம்.

ஆனாலும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களினதும் குறிப்பாக பெண்களினதும் குழந்தைகளினதும் முன்னாட்போராளிகளினதும் எதிர் காலத்தைக் கருத்திற்கொண்டு இவ்வாறான செயற்றிட்டங்கள் செய்வது தவிர்க்க முடியாதது ஆகும்.

ஊனமுற்ற ஒரு தேசமாக இருப்பதைவிட இவ்வாறான செயற்றிட்டங்கள் மூலமாக ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்ப முயற்சிப்பதில் எந்தவகையிலும் தவறில்லை. இது நமது தொடர்ச்சியான போராட்ட முன்னெடுப்புகளுக்கும் தேசத்தின் விடுதலைக்கும் தடையாக இருக்கப் போவதில்லை. மாறாக பலம் சேர்க்கும் ஒன்றாகவே இருக்கும்.

இறுதியாக, "நமது தேசம் ஊனமுற்ற தேசமாக, தாம் வாழ்வதற்காக மற்றவர்களிடம் கையேந்தி பிச்சையெடுக்க வேண்டுமா இல்ல சொந்தக் காலில் நிற்கவேண்டுமா என தீர்மானிப்பதில் புலம் பெயர்ந்த மக்களுக்கும் பங்கு உண்டு. பிச்சைக்கார தேசத்தால் தனது விடுதலக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லையெனில் தேசிய விடுதலைப்போராட்டத்தைப் பற்றி கதைப்பதற்கு அருகதையை நாம் இழந்தவர்களாவோம்."

புலம் பெயர்ந்த தேசங்களிலிருந்து பலபேர் புலம் நோக்கி செல்கின்றனர். இப்படி செல்கின்ற பலரும் கல்யாணங்கள், கோயில் திருவிழாக்கள், ஊர் சுற்றுலாக்கள் போன்றவற்றிற்கே செல் கின்றனர். மிகச்சிலரே அந்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் அவர்களின் வேதனைகளை அறிவதற்காகவும் அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காகவும் செல்கின்றனர். இவ்வாறான நோக்கங்களுக்காக செல்பவர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிரிகரிக்கப்பட வேண்டும். உண்மையிலேயே இப்பொழுதான் அதிகமானவர்கள் அங்கு செல்லவேண்டும். ஆம், தங்கள் உயிருக்கு பாதுகாப்பானவர்கள் என உணர்பவர்கள் மட்டுமே செல்ல வேண்டும். ஆனால், பலபேர் முக நூல் புரட்சி செய்துவிட்டு தமக்கு பிரச்சினையென சும்மா படம் காட்டுபவர்களும் இருக்கிறார்கள்.

ஆகக் குறைந்தது அம்மக்களுக்கு ஆனந்தத்தையும் அமைதியையுமாவது இவர்கள் வழங்க வேண்டும். நாம் மீண்டும் இலங்கைக்கு- வடக்குக்கிழக்கு, மலையகத்திற்கு செல்வது ஒரு இயக்கமாக மாறவேண்டும். உண்மையிலேயே தமிழ்த் தேசத்தின் விடுதலையில் அக்கறையாக இருக்கிறவர்கள் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவையிரண்டும் ஒரு இயக்கம் போல அலையலையாக நடைபெற வேண்டும். வெறுமனே ஆயுதம் தூக்கிப் போராடுவது மட்டும் போராட்டம் அல்ல. காலத்திற்கு ஏற்றாற்போல் நமது இலக்கை நோக்கிய பயணத்தை முன்னெடுப்பதற்கு புதியவழி முறைகளையும் தந்திரோபாயங்களையும் கண்டறிவதே ஆராக்கியமானதும் முன்னேற்றகரமானதுமாகும் என்பதப் புரிந்து கொள்வோமா?

மீராபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு

(பூநகரி)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய மாவட்ட மட்டப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இருவர் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளதாக பூநகரி பிரதேச கலை கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி நரேந்திரா அறிவித்துள்ளார். மேற்படி போட்டிக்கு முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை கனிஷ்ட பிரிவில் இருந்து வி.லோஜினியும் திறந்த போட்டிக்கு நாட்டார் கலை நிகழ்வில் செ.தர்மிகாவும் தெரிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-84)

## ஆயுதங்களுடனும் அதிகாரத்துடனும் அரசு தேர்தலில் போட்டியிடுகிறது

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(பொலநறுவை)

அரசாங்கம் உரோம படையைப் போன்று தேர்தலில் போட்டியிடுவதாக ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டைய உரோம வீரர்கள் நிராயுதபாணிகளான அடிமைகளுடன் போர் நடத்தியதைப் போன்றே அரசாங்கம் மூன்று மாகாண சபைத் தேர்தலிலும் களமிறங்கியுள்ளது.

ஆயுதங்களுடனும் அரச அதிகாரத்துடனும் அரசாங்கம் தேர்தலில் போட்டியிடுகின்றது. எதிர்க்கட்சியினரை நிராயுதபாணிகளாக்கி சிறையில் அடைத்துள்ளது.

படைவீரர்கள் வெற்றியீட்டியதன் பின்னர் அந்த வெற்றி திறமையினால் கிடைத்தது என பிரசாரம் செய்கின்றனர். தேர்தல் வன்முறைகள் வழமையானவை. நல்ல வழியில் அல்லது கெட்ட வழியில் தேர்தலை வெல்வேன். இறக்கும் வரையில் நானே முதலமைச்சர் என ஆளும் கட்சி வேட்பாளர்கள் கூளுரைக்கின்றனர்.

ஆளும் கட்சியின் அதிகார துஷ்பிரயோகமே இவ்வாறு கூளுரைக்கத் தூண்டியது என்றார். (அ-2)

## குடிநீர் போதுமானதாக இல்லை

# நீரைப்பெற்றுக்கொள்ள பொதுமக்கள் முண்டியடிப்பு

(பூநகரி)

பூநகரிப்பகுதி கிராமங்களில் கேந்திர இடங்களில் வைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கிகளில் பூநகரி பிரதேச சபை பவுசர் மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லையென பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப் படுகிறது.

குடிநீர்த் தாங்கிகளில் விநியோகிக்கப்படும் குடிநீரைப் பங்கிடும்போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்படும் நிலையும் ஏற்படுவதாக அவர்களால் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, மறவன்குறிச்சி கிராமத்தில் குடிநீர்த் தாங்கி வைக்கப்பட்டு இரு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை நீர் விநியோகம் இடம்பெறவில்லை. இவ்விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச சபைத் தலைவரிடம் பலமுறை மக்கள் தெரிவித்தபோதும் இற்றைவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

எனவே, உரிய அதிகாரிகள் மேற்படி நீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு ஆவன செய்யுமாறு மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. இல்லையேல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்தக் குடிநீர் பிரச்சினையானது பூதாகரமாக வெடிக்கும் என்பதில் ஐயமில்லை. (அ-2-84)

# தொ.நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு பரீட்சைகள் நடத்தப்படவில்லை

(பூந்தோட்டம்)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவை, வட மாகாண உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்விற்காக நடத்தப்படும் முதலாம், இரண்டாம் திணைக்களப் பரீட்சைகள் வடக்கு- கிழக்கு மாகாணம் ஒன்றாக இருந்த காலப்பகுதியில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. வடமாகாணம் தனி மாகாணமாக பிரிக்கப்பட்ட பின்னர் 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை எந்தவொரு பரீட்சையும் வட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் நடத்தப்படவில்லை எனவும் 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு அளவையிடுதலும் மட்டம் பார்த்தலும் பாடத்திற்குரிய செய்முறைப் பரீட்சையும் நடத்தப் படவில்லை எனவும் வட மாகாண தொழில் நுட்பவியலாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக பல தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தங்களுக்குரிய பதவியுயர்வுகளை பெற்றுக் கொள்ளமுடியாத நிலைமைக்கு வட மாகாண சபையினால் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதுபற்றி பலமுறை சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பொழுதிலும் அவைக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

மேலும் இலங்கையில் ஏனைய மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படாத திணைக்கள ஒழுங்கு விதிகள் என்ற ஓர் பாடம் வட மாகாண இலங்கை தொழில்நுட்பவியல் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடம் முதலாம், இரண்டாம் திணைக்கள பரீட்சைக்குரிய பாடங்களுடன் சேர்த்து நடத்தப்படுவதுடன் முதலாம் பரீட்சையில் சித்தியடையும் உத்தியோகத்தர் இரண்டாம் ஆம் பரீட்சைக்கு தோற்ற தேவையில்லை என்ற நடைமுறையுடன் இரண்டு பரீட்சைக்கும் ஒரே பாடத்திட்டம் நடைமுறையில் உள்ள போதும் இரண்டாம் பரீட்சைக்கு தோற்றி சித்தியடையும் பரீட்சார்த்திக்கு முதலாம் பரீட்சையிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்கு வட மாகாண நிர்வாக செயலகமும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவும் கடும் போக்குடன் காணப்படுவதன் காரணமாகவும் அநேகமான உத்தியோகத்தர்கள் பாதிப்படைந்துள்ளார்கள் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, வட மாகாண நிர்வாக செயலகம் மற்றும் மாகாண் பொதுச்சேவைகள் ஆணைக்குழு என்பனவற்றின் செயலாளர்களின் அசமந்த போக்கு மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகவுள்ளது.

இதேநேரம் மத்திய அரசாங்கத்தினால் நடத்தப்படும் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களும் வட மாகாண நிர்வாக செயலகம் மற்றும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு என்பனவற்றின் செயலாளர்களினால் ஒவ்வொரு காரணங்கள் கூறப்பட்டு நிராகரிக்கப்படுவதும் கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு வடமாகாண இலங்கை தொழில் நுட்பவியல் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டு எந்தவொரு உத்தியோகத்தரும் பாதிக்காத வகையில் பரீட்சைகள் முற்திகதியிடப்பட்டு நடத்தப்பட ஆவன செய்துதவுமாறு வட மாகாண சபை நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களையும் குறிப்பாக ஆளுநரையும் பாதிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்தனர். (அ-9-266)

# கபிலவஸ்துவை ஒருவாரம் வரை வைத்திருக்க இந்தியா அனுமதி

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கபிலவஸ்து புனித சின்னங்களை மேலும் ஒரு வாரத்துக்கு பொதுமக்களின் பார்வைக்காக வைக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

கபிலவஸ்து புனிதசின்னங்களை இலங்கையில் இருந்து நேற்றையதினம் இந்தியாவுக்கு கொண்டு செல்வதென்று முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இப்போது புனித சின்னங்கள் இலங்கையில் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை 3 இடங்களில் வைக்கப்படும் என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. கபில வஸ்து புனித சின்னங்கள் அரச மரியாதையுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தியாவுக்கு எடுத்து செல்லப்படும். (அ-2)

# கிளி.விக்னேஸ்வரா வித்தி. திறந்து வைப்பு

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 4 ஆம் கட்டை பகுதியில் உள்ள கிளி/ விக்னேஸ்வரா வித்தியாலயம் போருக்கு பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது. அண்மைக்கால போர்ச்சூழல் காரணமாக அழிவுற்ற இப்பாடசாலை மீண்டும் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையில் 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கவுள்ளனர். இந்நிகழ்வில் கிளி/ வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், பூநகரி உதவி அரசாங்க அதிபர் வசந்தகுமார், கிளி/ வலயக்கல்வி பணிமனை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-3-254)






வடமாகாண திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாண அமைச்சின் திணைக்களத்தினால் முன்னெடுத்து செய்யப்படும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான ஆராய்வும் கலந்துரையாடலும் நேற்று வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வட மாகாண சபை முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக திட்டமிடல் அமைச்சின் செயலாளர் எஸ்.உமாகாந்தன் விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உட்பட அதிகாரிகள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

210

## குரங்கும் வேடனும்

ஒரு காட்டிலே, சிறு குடிசை ஒன்று இருந்தது. அந்தக் குடிசையிலே ஒரு வேடன், தனது மனைவி, குழந்தைகள் ஆகியோரோடு வாழ்ந்து வந்தான். அவன் தனது குடும்பத்திற்கு வேண்டிய உணவிற்காக ஒவ்வொரு நாளும் வேட்டைக்குச் செல்வது வழக்கம்.

ஒருநாள் அவன் வழக்கம் போல வேட்டையாடச் சென்றான். அன்று காலை தொடக்கம் மாலை வரை அவனுக்கு ஒரு மிருகமும் அகப்படவில்லை. ஆகவே, அவன் மேலும் காட்டுக்குள்ளேயே சென்றான். அது அடர்ந்த மரங்கள் நிறைந்தகாடு. மரங்கள் பின்னிப் படர்ந்து நிறைந்து நின்றதால் சூரியவெளிச்சம் இல்லாமல் இருட்டாக இருந்தது.

உயர்ந்த மரக்கிளையில் இருந்த மயில்கள் அகவின. ஏனைய பறவைகளும் வேடனது வரவைக் கண்டு கீகீ என்று கீச்சிட்டன. பறவைகளின் சத்தத்தைக்கேட்ட விலங்குகளும் விழிப்படைந்தன. பறவைகளின் எச்சரிக்கையைக் கேட்டு மிருகங்கள் ஓட்டம் பிடித்தன.

மாலைநேரம் ஆகியது. வேடனுக்கு இன்னும் ஒரு மிருகமேனும் அகப்படவில்லை. எனவே, அவன் வீட்டுக்குச் செல்லத் தீர்மானித்தான். ஆனால், அவன் பிழையான வழியிற் சென்றான். எனவே, காட்டில் வழி தவறினான். அவன் சுற்றிச் சுற்றி ஒரேவழியில் நடந்தான். மேலும் மேலும் சரியான வழியைக் கண்டுபிடிக்க ஆற்றாதவன் ஆகினான். அவனுக்குத் தனது மனைவி, பிள்ளைகளின் நினைவு வந்தது. அவர்கள் தனது வரவை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார்களே என்று எண்ணிய போது மிகவும் கலங்கினான்.

கடைசியாக இருட்டும் வேளையில் வேடன் காட்டுக்கு வெளியே செல்லும் வழியைச் கண்டுபிடித்தான். அவன் மிக மகிழ்ச்சியடைந்தான். அவன் இருட்டுமுன் வீட்டுக்குத் திரும்ப விரைந்தான்.

திடீரென, பெரிய புலியொன்று பற்றை மறைவிலிருந்து வெளியே பாய்ந்துவந்து அவன் முன்னே நின்றது. அவன் புலியைக் கண்டு நடுநடுங்கி விறைத்துப் போனான்.

புலி பதுங்கிப் பதுங்கி இரையைப்பிடிக்க வேடனை நோக்கி மெதுவாக நடந்துவந்தது.வேடன் தனது வில்லால் புலியை எய்து வீழ்த்தக் கால அவகாசம் போதியதாக இல்லை. எனவே, அவன் ஓடித் தப்பத் தீர்மானித்தான். அவன் தன்னால் இயன்றளவு வேகமாக ஓடினான். புலியும் அவனைத் துரத்திக் கொண்டு பின்னால் ஓடியது.

வேடன் தான் ஓடித்தப்புவது கடினம் என உணர்ந்தான். அவன் தனது வில்லையும் கீழே போட்டுவிட்டுஅவசர அவசரமாக ஒரு மரத்தில் ஏறினான். அந்த மரத்திலிருந்து பாலூட்டும் குரங்கு ஒன்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்கு வேடன் மேல் இரக்கம் உண்டாயிற்று. அது ஒரு திராட்சைக்கொடியை வேடனிடம் எறிந்தது. வேடனிடம் திராட்சைக் கொடியைப் பிடித்துக் கொள்ளும்படி கூறியது. திராட்சைக் கொடியை மேலே இழுத்து வேடனை மரத்தில் ஏறிக்கொள்ளச் செய்தது. வேடன் மயிரிழையில் உயிர் தப்பினான். புலி, வேடன் மரத்திலிருந்து இறங்கும் வரை மரத்தின் அடியிலே பார்த்



துக் கொண்டு இருந்தது. இரவு வேளை வந்தது. வேடனும் குரங்கும் மரத்திலிருந்தவாறே மாறி மாறிக் காவல் செய்தார்கள்.வேடன் நித்திரை கொள்ளும் போது அவனைக்கீழே தள்ளிவிடும்படி குரங்கிடம் புலி இரந்து கேட்டது. வேடன் கொடியவன்; அவன் மிருகங்களைக் கொல்பவன்; அவனைக் கீழே தள்ளிவீழ்த்திவிடு என்றது புலி. நீ சொல்லுகிறபடி நான் செய்யமாட்டேன்; ஏன் தெரியுமா வேடன் என்னிடம் அடைக்கலமாக வந்திருக்கிறான். அவனைக் காப்பாற்றுவது என் கடமை என்றது குரங்கு. இதனைக்கேட்ட புலி அங்கிருந்து சென்றுவிட்டது.

நடு இரவு அண்மியது. குரங்கு வேடனை எழுப்பிக் காவல் செய்யுமாறு சொன்னது. அது நித்திரை கொள்ளுமுன் வேடனிடம் புலி எவ்வளவு இரந்து கேட்டாலும் அதை நம்பாதே. விழிப்பாய் இரு; விசுவாசமாய்க் கடமையைச் செய் என்று எச்சரித்தது.

குரங்கு நித்திரை ஆகிவிட்டதைக் கண்டபுலி மரத்தடிக்கு வந்தது. அது வேடனைப் பார்த்து, நீ குரங்கைக் கீழே தள்ளிவிட்டால் நான் அதைக் கொன்று தின்பேன். அதன்பின் உன்னையும் உயிர் தப்பிப்போக விடுவேன் என்றது.

வேடன் சுயநலக்காரன்; அவனுக்கு வீட்டுக்குப் போகும் ஆசை வந்தது. அவன் புலியின் பேச்சை நம்பினான். குரங்கு ஆபத்து நேரத்திலே தனக்குச் செய்த உதவியைக் கணத்தில் மறந்தான். அவன் குரங்கைக் கீழே தள்ளி வீழ்த்திவிட்டான். புலி குரங்கைக் கழுத்திலே பிடித்துக் கொண்டது. இயல்பாகவே இரக்கமுள்ள அக்குரங்கு வலிந்து சிரித்தது. இதனைக் கண்டபுலி ஆச்சரியப்பட்டது. புலி குரங்கைப்பார்த்து நீ ஏன் சிரிக்கிறாய்? நான் உன்னைக் கொன்று தின்னப்போகிறேன். அது விளங்கவில்லையா? என்றது.

குரங்குக்குச் சமயோசித புத்தி உதயமாகியது. அது புலியைப் பார்த்து

## நாட்டார் கதைகள்

எனக்குப் பெரிய உருவம், சக்தி, வலிமை எல்லாம் இருந்தும் பயன் இல்லை. உனக்குச் சிறிதும் மூளையே இல்லைபோலும். சுத்தமடையனாய் இருக்கிறாயே! சாதாரணமாகக் குரங்குகளைக் கழுத்தில் நெரித்துக் கொல்லவே முடியாது. ஏனென்றால், அவற்றின் இருதயம் கழுத்துப் பகுதியில் இருப்பதில்லை. அது அவற்றின் வால்களின் நுனிகளிலேதான் இருக்கின்றது என்று பதில் கூறியது.

புலி குரங்கின் பேச்சை நம்பியது. அது குரங்கின் கழுத்துப் பிடியைக் கைவிட்டு அதற்குப் பதிலாகக் குரங்கின் வாலைப் பிடிக்கப் போனது.

குரங்கு சட்டென மரத்தில் ஏறிக் கொண்டது. புலி, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. அதற்குக் கோபம் உண்டானது. மறுபக்கத்தில் மிகத் துக்கமும் உண்டானது. புலிக்குக் கடும் பசி. குரங்கு மரத்திலிருந்து இனி மேலும் கீழே இறங்கமாட்டாது. வேடனும் மரத்திலிருந்து இறங்கவேமாட்டான். ஆகவே, புலி அவ்விடத்தை விட்டுச் சென்று வேறு ஏதாவது இரை தேடச் சொன்னது.

பொழுதுவிடிந்தது. சிறிது நேரத்திற்குப் பின் குரங்கு வேடனைப்பார்த்து, நீ ஒன்றும் சாப்பிடவில்லையா? இப்போது உனக்கு நல்ல பசியிருக்கும் என்று நினைக்கிறேன். நான் வெளியிற் சென்று சில பழங்களைத் தேடிப்பறித்து வருகிறேன். இதோ என்குட்டி இருக்கிறது. அதைக்கொண்டு சென்று திரும்புவதானால் பிரயாணம் காலதாமதமாகும். நான் அதை உன் கண்காணிப்பில் விட்டுச்சென்று வருகிறேன். அதைக் கவனமாகப் பார்த்துக் கொள் என்று கூறி விட்டுப் பழங்கள் கொண்டுவரச் சென்றது.

தாய்க்குரங்கு வெளியே சென்றிருந்த வேளையில் கீழேயிருந்த புலியும் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டது. இதைக்கண்ட வேடன் உடனே வீட்டுக்குப் புறப்படத் தீர்மானித்தான். அவன் போகும் போது மனைவிக்கும் மக்களுக்கும் ஏதாவது கையில் கொண்டு செல்ல எண்ணினான். குரங்குக் குட்டியைக் கொண்டு சென்றால் குழந்தைகள் அவற்றை வைத்து விளையாடுவார்களே என்று நினைத்தான். எனவே, குரங்குக்குட்டியைப் பிடித்துக் கொண்டு மரத்திலிருந்து இறங்கினான்.

வேடன் வீட்டுக்குச் செல்லும் வழியில் பழங்களைச் சுமந்து கொண்டு வந்த தாய்க்குரங்கைச் சந்தித்தான். அது தனது அருமைக்குட்டியைத் திருப்பித் தரும்படி மன்றாடியது. அவன் கொடுக்க மறுத்து விட்டான். அவனுக்குக் கோபம் வந்தது. அவன் தனது வில்லால் தாய்க் குரங்கைக் கொன்று விட்டான்.

வேடன் குரங்குக் குட்டியைத் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி விரைந்து சென்றான். அவ்வாறு செல்லும்போது வழியில் புலி மறைந்திருந்த இடத்தைக் கடந்து சென்றான்.புலி அவனைக் கண்டது. அது திடீரென அவன் மேலே பாய்ந்தது. அது அவனைப் பல்லாலே கடித்துக்கொன்று தின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரன் ஏற்படுத்தும் பலன்கள்




பொதுவாக வாரபலன் எழுதும் போது சில இராசிகளுக்கு சந்திராஷ்டம நாளைக் குறிப்பிட்டு எச்சரிக்கை விடுவதுண்டு. சந்திராஷ்டமம் உஷார் என்றுதானே எழுதுகிறோம். இதன் உண்மை தெரிந்தவர்கள் சிலர்; தெரியாதவர்கள் பலர்.

அஷ்டமம் என்றால் எட்டு. சந்திராஷ்டமம் என்றால் எட்டாமிடத்தில் சந்திரன் என்று பொருள். அதாவது ஒரு குறிப்பிட்ட இராசியிலிருந்து சந்திரன் ஒவ்வொரு இராசியாகக் கடந்து எட்டாவது இராசியைப் பிடிக்கும்போது சந்திராஷ்டமம் ஏற்படுகிறது என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

பொதுவாக, எட்டு என்கிற எண்ணே சில கஷ்டங்களை ஏற்படுத்தும் என்கிற நம்பிக்கை எல்லோரிடமும் நிலவிவருகிறது. ஜோதிடத்திலும் எட்டாமிடம் பெற்ற கிரகங்கள் நற்பலன்களை ஏற்படுத்துவதில்லை என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

இந்தவகையிலேதான் இதற்கு முன் எட்டாமிடத்தில் நிற்கும் கிரகங்கள் ஏற்படுத்தும் பலன்களை ஆராய்ந்து எழுதியிருந்தோம். ஆகவே, சந்திரன் ஜென்மராசியை விட்டு ஒவ்வொரு இராசிக்கும் போகும் போது ஒவ்வொரு விதமான பலன்கள் ஏற்படுத்தும்.

அவ்விதம் எட்டாமிடம் பெற்றுவிட்டால் ஏதாவது தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்பதால்தான் சந்திராஷ்டமம் உஷார் என்கிறோமே தவிர, குறிப்பிட்ட நாளில் நின்ற நிலையிலிருந்து கீழே விழுந்து விடுவோமோ அல்லது எங்காவது மோதிக் கொள்வோமோ என்று பயமுறுத்து வதற்கு அல்ல.

கோள்கள் வருடக்கோள்களென்றும் மாதக் கோள்களென்றும் தினக்கோள்களென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வருடக்கோள்கள் என்பவை குரு, சனி, இராகு, கேது முதலான நான்கு கோள்கள். மாதக் கோள்கள் என்பவை சூரியன், செவ்வாய், புதன், சுக்ரன் முதலான நான்கு கோள்கள். சந்திரன் ஒருவனே தினக்கோளாகும்.

வருடக்கோள்களைக்கொண்டு வருடப் பலன்களையும் மாதக்கோள்களைக் கொண்டு மாதப்பலன்களையும் ஏற்படுத்துவது போல், தினக்கோளாகிய சந்திரனைக் கொண்டுதான் தினப்பலன் ஏற்படுத்தப்படுகிறது.

27 நட்சத்திரங்களும் 12 இராசிகளில் அடங்கியிருக்கின்றன. அதாவது ஒரு இராசிக்கு 21/2 நட்சத்திரம் வீதம் அடங்கியிருக்கும்.

உதாரணமாக, நீங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்கிறோம். திருவாதிரை நட்சத்திரம் மிதுன இராசியில் அடங்கியிருப்பதால் உங்கள் இராசி மிதுனமாகிறது. அது முதல் சந்திரன் ஒவ்வொரு இராசியாக ஏழு கிரகங்களைக் கடந்து எட்டாவது இராசியாகிய மகர இராசியைப் பிடிக்கும் போது சந்திராஷ்டமம் ஏற்படுகிறது என்பது தெளிவு.

அதுபோலவேதான் ஏனைய இராசிகளுக்கும் பார்க்கவேண்டும். சந்திரன் தினக்கோளாகையால் தான் கடந்து செல்லும் ஒவ்வொரு இராசிக்கும் ஒவ்வொரு விதமான பலன் ஏற்படுத்துவான். இதைக் கொண்டுதான் ஜோதிடர்கள் தினப்பலனும் வாரப்பலனும் ஏற்படுத்துகிறார்கள்.

இப்போது சந்திரன் ஒவ்வொரு இராசியிலும் நின்றால் என்ன பலன் ஏற்படுத்துவான் என்று பார்ப்போம்.

சந்திரன் ஜென்மராசியில் நின்றால், சௌக்கியம் அதிகப்படும். சிலகாரியங்களுக்கு ஆகாது. இரண்டாமிடத்தில் நின்றால் நஷ்டங்களை ஏற்படுத்துவான்.

மூன்றாமிடத்தில் நின்றால் பணவரவு ஏற்படும், ஆதாயங்கள் மிகுந்து காணும்.

நான்காமிடத்தில் நின்றால் வியாதிகள் ஏற்படும். தாயார் வகைக்கு மனக்கவலைகள், சஞ்சலங்கள் நேரும்.

ஐந்தாமிடத்தில் நின்றால் காரியத் தடைகள் ஏற்படும். துயரச்செய்தி காதில்விழும்.

ஆறாமிடத்தில் நின்றால் பணவரவு ஏற்படும். விரோதிகளை வெற்றிகாண்பது ஏற் படும்.

ஏழாமிடத்தில் நின்றால் கடன் கிடைக்கும். சாதாரண பலன்களே ஏற்படும். மனைவிக்கு நல்லதல்ல.

எட்டாமிடத்தில் நின்றால் காரியத் தடைகளும் இடையூறுகளும் எதிரிகளால் தொல்லையும் கவலைகளும் ஏற்படும்.


ஒன்பதாமிடத்தில் நின்றால் பொருள் நட்டத்தையும் தாமதப் பலனையும் ஏற்படுத்துவான்.

பத்தாமிடத்தில் நின்றால் சகல துறைகளிலும் நன்மையே ஏற்படும். பணவரவு உண்டு.

பதினொராமிடத்தில் நின்றால் கடன் கிடைக்கும். புதிய பொருட்கள் சேரும்.

பன்னிரெண்டாமிடத்தில் நின்றால் சகல துறைகளிலும் நட்டமேற்படும்.

ஆக, எட்டாமிடம் பெறும் சந்திரன் ஏற்படுத்தும் பலன்களைப் பார்த்தீர்களா? காரியத் தடைகள், இடையூறுகள், எதிரிகளால் தொல்லை, கவலைகள்.



ஆகவேதான் குறிப்பிட்ட நாளில் சந்திரன் எட்டாமிடம் வரும்போது சந்திராஷ்டமம் உஷார் என்று எச்சரிக்கிறோம். நீங்களும் எச்சரிக்கையாக இருந்து திருப்தியற்ற பலன்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளலாமல்லவா.

ஆனால், தேய்பிறையில் பிறந்தவர்களுக்கு எட்டாமிடத்துச் சந்திரனால் எவ்விதக் கெடுபலனும் ஏற்படுவதில்லை என்று சில ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

தேய்பிறையில் பிறந்தவர்களுக்கு எட்டாமிடச் சந்திரனால் எவ்விதக்கெடுபலனும் ஏற்படுவதில்லை என்று சில ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

தேய்பிறையில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் கெட்டவனாகிறான். ஒரு இராசிக்குக் கெட்டுவிட்ட சந்திரன் எட்டாமிடம் பெறுவதால் மீண்டும் கெட்டு நல்லவனாகிறான். எனவே, **கெட்டவன் கெட்டிட கிட்டிடும் ராஜயோகம்** என்று சொல்வதற்கிணங்க ஒரு சிலருக்கு நற்பலன்களே ஏற்படுத்துகிறான் என்பது கண்கூடு.

# இங்கு அனைத்து இனமக்களும் அமைதியாக வாழ்கின்றனர்

## கலகம தேரர் பெருமிதம்

(அநுராதபுரம்)

ஜனாதிபதியின் மதவிவகார ஆலோசகர் கல கம தம்மரன்ஸி தேரர் முஸ்லிம்கள் புனித ஹஜ் பெருநாள் காலத்தில் குர்பான் கடமையை நிறைவேற்றுவதற்கு மகா சங்கத்தினரோ, பௌத்தமத குருமாரோ எதுவிதமான இடைஞ்சல்களையும் செய்ய மாட்டார்கள் என்று ஜனாதிபதியின் பௌத்தமத விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர் கல கம தம்மரன்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாண சபைத் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்த நாட்டில் வாழும் சகல இன, மத மக்களுக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட் டுள்ளன. இதனை எவருமே மறுக்கமாட்டார்கள்.

இவ்வாறான நிலையில் சில தீயசக்திகள் ஹஜ் பெருநாள் காலத்தில் முஸ்லிம்கள் குர்பான் கடமையை நிறைவேற்ற முடியாது எனக்கூறி அப்பட்டமான பொய்ப்பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார்கள். அவற்றில் எதுவிதமான உண்மையுமேயில்லை. தீய சக்திகளின் பொய்ப்பிரசாரத்தை நம்பி முஸ்லிம்கள் மனம் தளர்ந்துவிடக்கூடாது.

இந்நாட்டில் எல்லா இன, மத மக்களும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தத்தமது மத, கலாசார உரிமைகளை முழுமையாக அனுபவிக்கிறார்கள்.

முஸ்லிம்களை அரசாங்கத்திலிருந்து தூரமாக்கும் தீயநோக்கில் தான் சில தீய சக்திகள் பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. இதனை முஸ்லிம்கள் உணர்ந்து கொண்டு விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (அ-2)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

**யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்**

**The Only Official French Language Centre in Jaffna**

**பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்**

❋ France இன் Paris நகரில் உள்ள தலைமை நிறுவனமாகிய "Alliance Francaise de Paris" ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Francaise de Jaffna" மட்டுமே.

❋ உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Francaises உள்ளன. இலங்கையில் COLOMBO, KANDY, JAFFNA,MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன.

❋ சர்வதேச தரம் வாய்ந்த இந்நிறுவனத்தில் France மற்றும் French பேசப்படும் நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

✦ ஒவ்வொரு மாணவரிடமும் Listening, speaking, reading & writinig ஆகிய திறமைகள் சோதிக்கப்படுகின்றன.

✦ 6 மாத கற்கைநெறியின் (BASICS 100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தரமான CERTIFICATE வழங்கப்படுகின்றது. 6 மாத்தினை பூர்த்தி செய்ய முடியாவிட்டால் கடிதம் ஒன்றை பெற்றுக் கொள்ளலாம்.

✦ அதன் பின்னர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய பரீட்சைகளான DELF, DALF பரீட்சைகளுக்கு குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினூடாக மட்டுமே அனுமதிகளை பெற முடியும்.

**வகுப்புக்கள்:- சனி, ஞாயிறுகளில்.....**

**புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

யாழில் தனியொரு முகவரி:

(347)

**61,Kachcheri- Nallur Road, Jaffna.** **TP No:- 021 222 8093/ நேரில் வரலாம்.**

**E-mail: alliancejaffna@yahoo.com**

(ருக்கா வீதியும் கச்சேரி- நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. அனுப்புவதாகக்கூறி பண மோசடி செய்தார்

## செந்தூரன் மீது புதிய வழக்கு

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை, சட்டவிரோதமாக படகில் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாக, செந்தூரன் பலரிடம் இலட்சக்கணக்கில் பணம் வசூலித்ததாக, பல்வேறு முகாமைச் சேர்ந்த அகதிகள் தமிழக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு மேலாக சிறையில் உண்ணாவிரதமிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ள இவர் மீது தற்போது புகார் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இலங்கை கண்டியைச் சேர்ந்தவர் செந்தூரன் வயது 31. புலிகள் இயக்க ஆதரவாளரான இவருக்கு முருகன் உட்படபல்வேறு பெயர்களில் செயற்பட்டுள்ளார்.

இவர்தமிழகத்திலுள்ள அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு, படகில் அழைத்துச் செல்வதாகக் கூறி, சிறியவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயும், பெரியவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும் வசூலித்து வந்தார்.

இதை நம்பி அவரிடம் பணம் செலுத்திய இலங்கை அகதிகள் 70 பேரை கடந்த ஜனவரி 13ஆம் திகதி கேரள மாநிலம் எர்ணா குளத்திலிருந்து கொச்சிவழியாக அவுஸ்திரேலியாவுக்குபடகில் அனுப்பத் திட்டமிட்டிருந்தனர்.

இலங்கை அகதி ஒருவர் சென்னை சங்கா நகர் பொலிஸில், அவுஸ்திரேலியாவுக்கு படகில் அனுப்புவதாகக்கூறி, செந்தூரன் பணம் வாங்கி ஏமாற்றி விட்டார்; கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டால் கொலை மிரட்டலுடன் ஆபாசமாக பேசுகிறார் என முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து செந்தூரன் மீது கொலை மிரட்டல், ஆபாசமாக பேசுதல், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் சங்கர்நகர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். அவர்மீது எடுக்கப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கையை கண்டித்து, உண்ணாவிரதம் இருந்துவந்தார்.

தற்போது சிறையிலடைக்கப்பட்ட செந்தூரன், தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் பலரிடம், அவுஸ்திரேலியாவுக்கு படகில் அனுப்பிவைப்பதாகக் கூறி, இலட்சக்கணக்கில் பணம் வசூலித்து மோசடி செய்த தகவல் வெளியானது.

அவரிடம் ஏமாந்த தமிழகத்தின் பல்வேறு அகதிகள் முகாமைச்சேர்ந்தவர்கள் செந்தூரன் மீது பொலிசில் புகார் கொடுக்கத் தயாராகவுள்ளனர். (அ-2)

## தேர்தல் சட்டங்களை மீறிய 15 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் நடவடிக் கைகளின் போது, தேர்தல் சட்டங்களை மீறி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 15 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களை நீதிமன்றத்தில் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் பிரசாரங்களின் போது, தேர்தல் சட்டங்களை மீறிய 50 பேருக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# முள்ளிவாய்க்கால் கொடுமையை இந்திய அரசு சொல்லத்தயங்குகிறது

## கவிஞர் காசி ஆனந்தன் தெரிவிப்பு

(சென்னை)

இரண்டு ஈழப்போராட்டத்திலும் நாம் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பு நிலத்தை சிங்களவரிடம் இழந்தோம். ஆனால், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆயுத மேந்திய காலங்களில் நாம் கையளவு நிலத்தைக்கூட இழக்கவில்லை என ஈழக்கவிஞர் காசியானந்தன் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் சங்கரன் கோவில் தமிழ் தமிழர் இயக்கத்தின் கொள்கைப்பரப்பு பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழம் என்பது தமிழர்களின் தாயகம். ஈழப்போர் தொடங்கியபோது சென்னை இலங்கைத் தூதரகம் முன்பு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்தவர்களை ஆதரித்துப்பேசினார் மூதறிஞர் ராஜாஜி.

முள்ளிவாய்க்கல் கொடுமையைப்பற்றி இந்திய அரசு சொல்லத்தயங்குகிறது. 5 ஆயிரம் வீடுகள் தமிழர்களுக்குக் கட்டித்தரப் பட்டதாக அங்கே உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் அங்கே போய் வந்தவர்களோ 500 வீடுகள்தான் கட்டப்பட்டன என்கிறனர். தாய் தமிழிச்சிகள் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

ஈழத்தில் பெரிய விடுதலைப்போர் வெடிக்கும் என்றபடி தனது உணரச்சிபூர்வமான உரையை முடித்தார். (அ-2)

# குடிநீர் விநியோகிக்க பவுசர்கள் பற்றாக்குறை

## மாந்தைகிழக்கு பிரதேசசபை தெரிவிப்பு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 30 கிராமங்களில் குடிநீருக்காக மக்கள் குடிநீர்க்கிணறுகள் தேடி அலைந்து திரிவதை காணமுடிகிறது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட 30 கிராமங்களிலும் மீள்குடியேற்றத்தின் பின் 2 ஆயிரத்து 589 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 100 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் குடியேறியுள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி நிலை காரணமாக இப்பிரதேச நீர் நிலைகள் வரண்டு போயுள்ளது. பொன்நகர், விநாயகபுரம், கரும்புள்ளியான், பூவரசங்குளம், பாண்டியன்குளம், செல்வபுரம் ஆகிய கிராமங்கள் நீர்ப்பற்றாக்குறையால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளன.

மாந்தை கிழக்குப்பிரதேச சபையிடம் உள்ள ஒரே ஒரு தண்ணீர் பவுசர் மூலம் நீண்டதூரங்களில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்க முடியாது பாதிக்கின்ற நிலை காணப்படுகின்றது. தண்ணீர் பவுசர்களை நலன் விரும்பிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரச மற்றும் அரச சார்பற்ற பொது அமைப்புகளும் அன்பளிப்பாக வழங்கி உதவுமாக இருந்தால் இக்கிராம மக்களினதும் கால்நடைகளினதும் நீர்த்தாகத்தைத் தணித்து உயிர்களை காப்பாற்ற முடியும் என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.தனிநாயகம் தெரிவித்துள்ளார். (அ-3-15)



கவிஞர் சித்திரா சின்னராஜா எழுதிய வல்லை வெளி கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா அண்மையில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி த.கலாமணி நூலை வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணம் ஐ.ஓ.எம். பொறுப்பதிகாரி யூறிசன் ஜெனராஜ் முதற்பிரதியை பெற்றுக் கொள்வதையும் எழுத்தாளர் தெணியான், நூலாசிரியர் சின்னராஜன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மின்னுற்பத்தி அதிகரிப்பு

(கண்டி)

நீரேந்து பகுதிகளில் இடையிடையே மழை பெய்து வரும் நிலையில் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதோடு, நீர் மின் உற்பத்தியும் 21 வீதமாக அதிகரித்துள்ளதாக மின்சாரசபை கூறியுள்ளது.

கடந்த சில மாதங்களாக நீரேந்து பகுதிகளில் மழை வீழ்ச்சி வெகுவாக குறைவடைந்த நிலையில் நீர்த்தேக்கங்கள் வரண்டதோடு, நீர் மின் உற்பத்தியும் 15 வீதம் வரை குறைவடைந்தது. இதனால் எரிபொருள் மூலமே கூடுதலான மின் உற்பத்தி செய்யப் பட்டது. இதற்கு கூடுதலான நிதி செலவிடப் பட்டது.

இதேவேளை கடந்த சில தினங்களாக நீரேந்து பகுதிகளில் இடைக்கிடை குறிப்பிடளவு மழைபெய்து வருகின்றது. இதனால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 22.3 வீதமாக உயர்ந்துள்ளது. (அ-2)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக மு.காங்கிரஸ் மனுத்தாக்கல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிறேமலால் ரணகலவிற்கு எதிராக கடந்த திங்கட்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம் மனுவில் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்கக்கோன், கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அமைச்சர் அதாவுல்லாவிற்கு ஆதரவாக, மிகவும் பக்க சார்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணகல செயற்பட்டு வருகின்றார் என்பதை சுட்டிக்காட்டியே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அவரது பக்கசார்பான நடவடிக்கை காரணமாக அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வன்முறைகள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார்.

இது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ரணகலவிற்கு எதிராக பல முறைப் பாடுகளை மேற்கொண்டபோதிலும் பொலிஸ்மா அதிபரினால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மேலும் அவர் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# படையினர் மீதான குற்றச்சாட்டை முறியடிக்க எமக்கு வாக்களியுங்கள்

## தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி உரை

(மானம்பிட்டி)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டது. எந்த சந்தர்ப்பத்திலும் மனித உரிமைகள் பறிக்கப்படவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். பொலநறுவை மானம்பிட்டி மைத்திரி விளையாட்டரங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை விவகாரம் தொடர்பில் மூடிமறைப்பதற்கு இலங்கையிடம் எதுவும் கிடையாது. இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்த முயற்சிக்கப்படுகின்றன.

புலிப்பயங்கரவாதிகளிடமிருந்து தப்பிவந்த தமிழர்களுக்கு தங்களது சோற்றை படைவீரர்கள் வழங்கி உபசரித்தார்கள். எமது படைவீரர்களுக்கு எதிராக போலியான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இம்முறை மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே! -அப்துல் கலாம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பாவ விமோசனம் பெற வந்தீரோ அம்மா!

மனித வாழ்க்கைச் சுற்றோட்டத்தைப் பார்க்கும் போது மனிதர்கள் எவ்வளவு பாவப்பட்ட பிறவிகள் என்று எண்ணத் தோன்றும். அந்தளவுக்கு மனிதர்களிடையே பதவி மோகமும் பண ஆசையும் சேர்ந்து பித்தலாட்டுகிறது.

பதவியிலிருக்கும் போது நல்லதைச் செய்ய வேண்டும் என்ற நினைப்பு அறவே ஏற்படுவதில்லை.

பதவியை விட்டு இறங்கியதும் அட! எனக்குத் திரும்பவும் பதவி கிடைத்தால் என்ன மாதிரியாக சேவை செய்வேன் என்ற நினைப்பு இராப்பகலாக உறுத்திக்கொண்டே இருக்கும்.

இப்படியான நபர்கள் பலரை சுட்டிக்காட்ட முடியும் என்றாயினும் அவர்களில் இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகவும் முக்கியமான ஒருவர்.

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இரு தட்வைகள் இருந்தவர் அவர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பேன் என்ற கோஷத்தோடு ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டியவர்.

என் கணவனை இழந்து நான் படுகின்ற துன்பம் - என் பிள்ளைகள் தந்தையைப் பறிகொடுத்து பரிதவிக்கின்ற அவலங்கள் இந்த நாட்டில் எவருக்கும் ஏற்படலாகாது என்பதே அவரின் தாரக மந்திரமாகியது.

ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளிலும் ஈடுபட்டார். ஆனாலும் பதவி அதிகாரங்கள் அவரின் மன நிலையை மாற்றின.

பௌத்த பீடங்கள் சிங்களம் - தமிழ் என அவரின் காதில் பிரித்(து) ஓதின. அனுருத்த ரத்வத்த தமிழர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் அனுமதியுங்கள் என்று சந்திரிகாவிடம் கேட்டு நின்றார்.

தமிழர்களுக்கு தீர்வு வழங்குவேன் என்ற சபதத்தை தூக்கி எறிந்த சந்திரிகா அம்மையார் 1995ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் படை நடவடிக்கை எடுத்து யாழ்ப்பாண மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து முற்றாக வெளியேற்றினார்.

இவ்வாறு வெளியேறிய மக்களில் பல ஆயிரக்கணக்கானவர்கள் கிளாலி கடலிலும் எறிகணைத் தாக்குதலிலும் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கினர்.

1996ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்களில் பலர் காணாமல் போயினர். சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு அனுப்பிய மக்களில் பலரை தற்போதைய அரசு பரலோகம் அனுப்பி வைத்தது.

இப்போது பதவி, அதிகாரம் அனைத்தும் இழந்து நிற்கும் சந்திரிகா அம்மையார் நேற்று முன்தினம் திடீரென யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

ஓ! நான் செய்த பாவங்கள் தீரவேண்டுமாயின் திருப்பதிக்கல்ல, யாழ்ப்பாணத்திற்கே செல்ல வேண்டும் என நினைத்து அவர் இங்கு வந்திருக்கலாம்.

ஆனாலும் பாவம் செய்தவர்கள், பாவம் செய்கின்றவர்கள் யாருமே உய்வு பெற்றதாக வரலாறு இல்லை என்பது சர்வ நிச்சயம்.

# துமிந்தவைக் கைது செய்ய பிடியாணை தேவையில்லை

## கொழும்பு மேலதிக நீதவான்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்வதற்கு பிடியாணை தேவையில்லை என கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் திறந்த மன்றில் அறிவித்துள்ளார்.

பாரதலக்ஸ்மன் உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மீண்டும் இடம்பெற்றபோது நீதவான் இதனைக் குறிப்பிட்டுள்ளார். துமிந்த சில்வாவிற்கு சுயநினைவு இல்லாமற் போனமை தொடர்பில் ஏற்றுக் கொள்ளக்கூடிய சாட்சியங்களையோ அல்லது மருத்துவ அறிக்கைளையோ இரகசிய பொலிஸார் நீதிமன்றில் முன்வைக்க வில்லை என பாரத லக்ஸ்மன்பிரேமச்சந்திரவின் உறவினர்கள் சார்பில் ஆஜரானசட்த்தரணிஉபுல் குமாரப் பெருமநீதிமன்றத்தில் தெரிவித்தார். அதன் காரணமாக சர்வதேச பொலிஸார் ஊடாக அவரைக்கைதுசெய்வதற்கானபிடியாணை பிறப்பிக்குமாறு சட்டத் தரணி நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை துமிந்த சில்வாவிற்கு சுயநினைவு இல்லாமற் போனமை தொடர்பிலான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வுத்திணைக்களம் நீதிமன்றில் குறிப்பிட்டது. இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பிலான பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான துமிந்த சில்வாவின் ஆதரவாளரான பிரியந்த ஜனக பண்டார என்பவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

அவர் ஆயுதக்குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் நவகம பொலிஸார் தமக்குத் தெரிவித்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியது.

இதேவேளை துமிந்த சில்வாவிற்கு மேற்கொள்ளப்படவேண்டிய இறுதிச் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட பின்னர் வைத்தியர்களின் ஆலோசனைப் படி அவரை இலங்கைக்கு அழைத்து வந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியும் என அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த் வர்ணகுலசூரிய குறிப்பிட்டார். (அ-2)

# நுளம்பு பெருக்கத்திற்கு சாதகநிலை; 18பேர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(பூந்தோட்டம்)

வவுனியா நகர்ப்பகுதிகளில் டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய இடங்களை வைத்திருந்த 18 பேர் மீது வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வவுனியா நகர்ப்பகுதியில் கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச்சங்கம், பொலிஸ் நிலையம், நகரசபை மைதானம், நகர சபைப்பூங்கா, கலாசார மண்டபம் உள்ள பகுதிகளும் நகரசபை ஊழியர் விடுதி உட்பட பல வர்த்தக நிலையங்களும் நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் உடனடியாக துப்புரவு செய்து நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழித்தவர்களைத்தவிர ஏனைய 18 பேர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் நகர்ப்பகுதியில் உள்ள பால்சபையை உடனடியாக மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடும் வரட்சி காரணமாக வர்த்தக நிலையங்களில் நீர் தேக்கி வைத்திருக்கும் தொட்டிகளில் நுளம்பு பெருகுவது அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையினால் அவ்வாறான இடங்களைப் பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து மூடியிட்டு வைக்குமாறும் கோரியுள்ளார். இதேவேளை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களில் நகர சபை ஊழியர் விடுதியில் உள்ளவர்களும் அடங்குவதாக தெரிவித்த அவர் சில அரச நிறுனங்களின் சூழல் மிகவும் மோசமாகக் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (அ-9-266)

# வவுனியாவில் டெங்கு தாக்கம்; மக்களே விழிப்புடன் இருங்கள்

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

வவுனியாமாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அண்மை நாட்களில் அதிகரித்து செல்வதன் காரணமாக அனைவரும் தாம் வாழும் சூழலை துப்புரவாகவும் நுளம்பு உற்பத்தியாகாத வகையிலும் பேணு மாறு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் ஓரிருவர் என டெங்கு நோயாளராக பதிவு செய்யப்பட்டு வந்த நிலையில் கடந்த மாதம் 9 நோயாளர்கள் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் மரணமடைந்துள்ளார். இதேவேளை இம்மாதம் 4 ஆம் திகதி வரையான பதிவின் அடிப்படையில் 7பேர் டெங்கு நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் ஒருவர் கடுமையாக பாதிப்படைந்த நிலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

அவ்வாறு டெங்கினால் பாதிப்படைபவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்கள் உட்பட உள்ளூரில் டெங்கின் பாதிப்புக்குள்ளானவர்களாகவும் உள்ளனர் எனவும் அவர்களில் அதிகமானோர் நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங் களில் தொழில்புரிபவர்கள் எனவும் தெரிவித்தார்.

எனவே டெங்கு நோய்க்குக் காரணமான நுளம்புகள் அதிகளவில் வவுனியா நகர்ப்பகுதியில் உருவாகுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே அனைவரும் தாம் வாழும் சூழலையும் அதனை அண்டிய பகுதிகளையும் சுத்தமாகப் பேணவேண்டுமென கோரிக்கை விடுப்பதுடன் துப்புரவாகச் சூழலை பேணாதவர்கள் மீது டெங்குத் தடைச் சட்டத்தின் கீழ் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார். (அ-9-266)

# இசட்புள்ளி தீர்ப்பு அமுலாகும் வரை போராடுவேன் -நாமல் எம்.பி

இசட் புள்ளி தொடர்பான தீர்ப்பு அமுல்படுத்தப்படும் வகையில் தொடர்ந்தும் போராடுவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இசட்புள்ளி குளறுபடியினால் பாதிக்கப்பட்ட 4ஆயிரத்து 928 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்குமாறு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அமுல் படுத்த வேண்டும்.

தீர்ப்பு அமுல்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு நியாயம் கிட்டும் வரையில் எனது போராட்டத்தை கைவிடமாட்டேன் என நாமல் தெரிவித்துள்ளார்.

இசட்புள்ளி பெறுபெறு தொடர்பில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்துக் கருத்துரைத்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## விரலால் கூட தீண்டாதீர்கள்



ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடியிருக்கிறேன். காய்கறி உணவை மட்டுமே சாப்பிட்டு வருகிறேன் என்று நீ சொல்வதானால் ஆன்மீகவாதியாகிவிட மாட்டாய். இதெல்லாம் உன் பெருமையை பறைசாற்றவே உதவும்.

ஆயுள் முழுவதும் நல்ல நூல்களைப் படிப்பதாலும் பேரறிஞர் ஆவதாலும் ஒருவன் ஆன்மீக உணர்வைப் பெறமுடியாது. சொற்பொழிவு நிகழ்த்தி கூட்டம் சேர்ப்பதும் ஆன்மீகப் பேற்றை அடைய உதவாது. அன்பின் மூலமாகத்தான் ஆன்மீக உணர்வைப் பெறமுடியும். அன்பிற்கே அத்தகைய வலிமை இருக்கிறது.

மனதையும் உடலையும் பலவீனப்படுத்தும் எந்தப்பொருளையும் உன் விரலால்கூட தீண்டக்கூடாது. அதற்குரிய பக்குவத்தை நீ பெற்றால்தான் ஆன்மீகத்தின் நுனியிலாவது கால்வைக்கமுடியும்.

ஆன்மீக உணர்வைப் பெறாத வரை நம் நாடு நிச்சயமாக மறுமலர்ச்சி அடையாது. நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல ஆன்மீக வழிகளைப் பின்பற்றி நடத்த உறுதியெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி

இலங்கையின் வடக்கே போர் நடைபெற்ற பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் பலர், ஊனமுற்றவர்கள், இயலாதவர்கள் என்ற ஒடுங்கிய மனோநிலையில் மூலையில் ஒதுங்கியிராமல் துடிப் போடு சிட்டிங் வொலிபோல் என்ற இருந்தபடி விளையாடுகின்ற கரப் பந்தாட்டப் போட்டியில் பங்கு கொள்வதற்காகத் தயார்படுத்தி வருகின்றார்கள்.

ஆசிய பிராந்திய பராலிம்பிக்ஸ் போட்டியில் இம்முறை பங்கெடுக்க வேண்டும் என்பது இவர்களின் நோக்கம். அனைவருக்கும் விளையாட்டு என்ற நோக்கத்தை முன்னெடுத்து செயற்பட்டு வருகின்ற ஹன்டிகப் இன்டர்நஷனல் என்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நிறுவனம் இதற்கான அனுசரணையை வழங்கியிருக்கின்றது.

வவுனியா நகரசபையின் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறுகின்ற இந்தப் பயிற்சிக்காக வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டுக்களில் ஆர்வமுடைய இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டுள்ளார்கள்.

இலங்கை சிட்டிங் வொலிபோல் சம்மேளனத்தைச் சேர்ந்த பயிற்சியாளர்களும் தேசிய மட்டத்திலான சிட்டிங் வொலிவோல் விளையாட்டு வீரர்கள் குழுவினரும் இணைந்து இவர்களுக்கான பயிற்சியை வழங்கியுள்ளார்கள்.



இலங்கை சிட்டிங் வொலிபோல் உட்பட கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் விளையாட்டுத்துறை பயிற்சியாளராகிய கொப்ரல் ஜெயசிங்க இவர்களுக்கான பிரதம பயிற்சியாளராகச் செயற்பட்டார்.

தேசிய மட்டத்திலான சிட்டிங் வொலிவோல் குழுவில் இடம்பெற்று சீனாவில் கடந்த வருடம் நடைபெற்ற சர்வதேச சிட்டிங் வொலிவோல் போட்டியில் கலந்துகொண்டு விளையாடிய பெருமைக்குரிய கிளிநொச்சியைச் சேர்ந்த மூவரில் இரண்டு இளம் பெண்கள் இந்தப் பயிற்சிக்காக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அவயவ இழப்புகளுக்கு ஆளாகியிருந்தாலும் வாழ்க்கையில் சாதனை புரிய வேண்டும். சமூகத்தில் முன் மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதே இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டிருந்தவர்களின் நோக்கமாக இருக்கின்றது.




# அரையிறுதியில் டயமன்ஸ்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழி ற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் டயமன்ஸ் அணியை எதிர்த்து பொமேர்ஸ் அணி மோதியது.இப்போட்டியில் 6:1 என்ற கோல்கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெறும் நிலையில் இரு கழகங்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பொமேர்ஸ் அணியினர் றெட்காட் காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டதையடுத்து டயமன்ஸ் அணி வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (3)

# ஊரெழு றோயல் அடுத்த சுற்றுக்கு தெரிவு

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு 3 பிறிமியர் லீக் முன்னணி கழகங்களுக்கிடையில் நடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் வதிரி பொமேர்ஸ் அணியை வெற்றி பெற்று ஊரெழு றோயல் அணி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

வடமராட்சி கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் வதிரி பொமேர்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

சுமார் ஒன்றரை மணித்தியாலயம் நடைபெற்ற போட்டியில் முதற்பாதி ஆட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் ஊரெழு றோயல் அணி முன்னணி வகித்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் இரு கோல்களை போட்ட ஊரெழு றோயல் அணி இறுதியில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வவுனியா யங்ஸ்ரார், பொலநறுவை ஐக்கியம் வதிரி பொமேர்ஸ் அணிகளை வெற்றி பெற்ற ஊரெழு றோயல் அணி அடுத்த சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (3-24)

# சென்றலைஸ் வி.க.நடத்தும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் k.c.c.c.வெற்றி

சென்றலைஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காலிறுதியாட்டத்தில் கொக்குவில் k.c.c.c. அணியினர் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

சென்றலைஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்துக்கான காலிறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் கொக்குவில் k.c.c.c. அணியினரும் பற்றீசியன்ஸ் அணியினரும் மோதிக் கொண்டனர்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர்.

31.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரமே பற்றீசியன்ஸ் அணியினரால் பெறமுடிந்தது. அதிகபட்சமாக அவ் அணி சார்பாக நோபிட் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டத்தினையும் பத்மமுரளி 23 ஓட்டத்தினையும் சஜீந்திரன் 13 ஓட்டத்தினையும் எரிக்பிரதாப் 13 ஓட்டத்தினையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் கொக்குவில் k.c.c.c. அணி சார்பாக ஜனுதாஸ் 45 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டினையும் கிருபவன் 14 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் சிலோஜன் 26 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டினை யும் கைப் பற்றினர். 127 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் k.c.c.c.அணியினர் 19.3 ஓவர்களில் தனது வெற்றி இலக்கினை அடைந்தனர்.



அவ் அணி சார்பாக அதிகபட்சமாக உமாநாத் 44 ஓட்டத்தினையும் பங்குவன் 25 ஓட்டத்தினையும் சாம்பவன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டத்தினையும் ராகுலன் 11 ஓட்டத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் பற்றீசியன்ஸ் அணி சார்பாக றோய் 18 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கிளின்டன் 21 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இதன் அடிப்படையில் 7 விக்கெட்டினால் வெற்றிபெற்ற கொக்குவில் k.c.c.c. அணியினர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை வீழ்த்தி ஒருநாள் தொடரை வென்றது அவுஸ்திரேலியா

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் வென்று அவுஸ்திரேலிய அணி தொடரைக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டி கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட இருபது -20 தொடர் டுபாயில் நடைபெற்று வருகிறது.

ஒருநாள் தொடரில் முதல் இரு போட்டியில் இரு அணிகளும் ஒரு போட்டியில் வென்று சமனிலையில் இருந்தன. இந் நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி சார்ஜாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டிழப்புக்கு 244 ஓட்டங்கள் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் சார்பாக முகமட் கபீஸ் அதிகபட்சமாக 78 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். அவுஸ்திரேலிய சார்பில் பந்துவீச்சில் மிச்சல் ஜோன்சன் 2 விக்கெட்டுக்களையும் ஸ்டார்க் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 245 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 47 ஓவர்களில் 7 விக்கெட்டிழப்புக்கு 250 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



அவுஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசி 65 ஓட்டங்களையும் மேக்ஸ்வெல் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், டேவிட் ஹசி 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் ஹசி தெரிவானதுடன் தொடர் நாயகனாக ஸ்டார்க் தெரிவானார்.

## கிழக்கில் ஆளு...

பொலன்னறுவவில் நடத்தப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்ததாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மட்டக்களப்பில் நேற்று முன்தினம் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## வடக்கு-கிழக்கிற்கும்...

தங்கியிருந்தே அனைவரையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது அவர் போர் நடந்த இரு மாகாணங்களுக்கும் செல்வதற்கான நிகழ்ச்சி நிரலை தனது பயணத்தில் சேர்த்துள்ளார் என அறிய வந்துள்ளது.

தனது குழுவினருடன் சுயாதீனமாகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று அங்கு தமிழ் மக்களைச் சந்தித்து உரையாடி அவர்களது நிலைமைகள் குறித்து நேரில் கண்டறிவார்.

விசேடமாக வடக்கில் மீள்குடியேறிய மக்களைச் சந்தித்து அவர்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதுடன் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து மேலதிக தகவலையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க நவநீதம்பிள்ளை தலைமையிலான குழுவினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சுயாதீனமாகச் செல்வதற்கான அனுமதி குறித்து இலங்கை அரசினால் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

## சப்ரகமுவவில்...

பிரிந்து போட்டியிட்டமையாலும், சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் கடந்த காலங்களில் மலையகத் தமிழ் மக்கள் தமது அரசியல் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்ய முடியாமல் போய் விட்டது என மலையகத் தமிழ் சிவில் சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் படிப்பினையை அடிப்படையாகக் கொண்டு சப்பிரகமுவ தமிழ் வாக்காளர்கள் மலையக தமிழ்க் கூட்டமைப்பின் பொதுச் சின்னமான சேவல் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

அதேபோல் மேலாதிக்கவாத சிந்தனைகளுக்கு எதிராக அணி தரண்டு தமது அரசியல் சமூக கலாசார இருப்பை உறுதி செய்து கொள்ளும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கும் கிழக்கு மாகாண தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும்.

சப்ரகமுவவிலும் கிழக்கிலும் தமிழ் வாக்காளர்களின் இன உணர்வு ஆதரவு அலையடித்தால் மட்டும் போதாது.

வாக்காளர்களாக பதிவுகளைக் கொண்டுள்ள அனைத்து தமிழ் வாக்காளர்களும் தமது வாக்குரிமையைத் தவறாது பயன் படுத்த வேண்டும் என மனோ கணேசன் தனது அறிக்கையில் கேட்டுள்ளார். (ந-11)

## இந்தியா வரும்...

நெருக்கமானகலந்தாலோசனையுடன் அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன் என அவர் கூறினார்.

சில முக்கிய விஜயங்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன்னறிவிக்கப்படாமல் இடம்பெற்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கமான வரலாற்று, கலாசார, இனத்துவ மற்றும் சிவில் உறவுகளில் மக்களுக்கும் மக்களுக்கு, இடையிலான தொடர்பு முக்கிய அங்கமாகும் என்பதை நான் கண்டுள்ளேன்.

கொழும்பிலுள்ள எமது உயர்ஸ்தானிகராலயம் கடந்த வருடம் சுமார் 2 இலட்சம் இலங்கையர்களுக்கு விசா வழங்கியுள்ளது.

2011ஆம் ஆண்டு சுமார் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் இலங்கையர்களுக்கு விஸா வழங்கியுள்ளது என அவர் கூறியுள்ளார். (ந-11)

## இலங். யாத்திரி...

எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டது. அதனால், அவர்கள் அங்கும் தரிசனம் செய்ய முடியவில்லை.

இலங்கை யாத்திரிகர்களுக்கு எதிர்ப்பு வலுத்துவரும் நிலையிலும், அது தொடர்பான செய்தி வேகமாக பரவி வரும் நிலையிலும் அவர்களை இலங்கைக்கு பாதுகாப்பாகத் திருப்பி அனுப்ப பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

அதற்காக, அவர்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு, திருச்சி விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். வரும் வழியில், திருவாரூர் அருகே மதிமுகவினர் அவர்களது வாகனங்களை மறித்து காலணிகளை வீசியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் வாகனங்கள் தொடர்ந்து வந்து கொண் டிருந்த போது, திருச்சி திருவெரும்பூர் அருகேமதிமுகவினர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினார்கள். அதில் 12 பேர் காயமடைந்துள்ளதுடன், மூன்று வாகனங்கள் சேதமடைந்துள்ளது.

பின்னர் அவர்கள் பாதுகாப்பாக விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். இன்று காலை விமானம் மூலம் அவர்கள் நாடு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாக்குதலில் ஈடுபட்ட மதிமுகவைச் சேர்ந்த 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பிரஜைகள் யாரும் தமிழ்நாட்டுக்கு செல்வதைத் தவிர்க்குமாறு இலங்கை வெளியுறவு அமைச்சகம் ஏற்கெனவே அறிவுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-11)

## இலங்கை இராணு...

யை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

அப்போது இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எந்தவொரு இடத்திலும் பயிற்சி அளிக்கக்கூடாது என்றும், ஏற்கெனவே பயிற்சி பெற்று வரும் இலங்கை இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி மனு ஒன்றை அளித்தனர்.

சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பதுடன், இது குறித்து திமுக தலைவர் கலைஞர், பிரதமருக்கு கடிதம் எழுதியிருப்பதை சுட்டிக்காட்டிய திமுக எம்.பிக்கள், அதன் பிறகும் மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாதது தமிழக மக்கள் மனதிலும், உலகெங்கும் வாழும் தமிழர்கள் மனதிலும் புண்படுத்துவதாக உள்ளது என்றும் அந்த மனுவில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இராணுவம் போர்க் குற்றம் புரிந்துள்ளதாக ஐ.நா பாதுகாப்புச் சபையால் அமைக்கப்பட்ட குழுவால் தெரிவிக்கப்பட்ட நிலையில், இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிப்பது, இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையை இந்தியா ஆதரிக்கிறதோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

எனவே பாதுகாப்புத்துறை அமைச்சர் இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திமுக எம்.பிக்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். (ந-11)

## திருப்பி அனு...

திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் அதைக் கொண்டு செல்வார்.

இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது. எனவே அவர்களை திருப்பி அனுப்ப வேண்டும் என்பது தான் திமுகவின் கோரிக்கையாகும்.

இலங்கை விளையாட்டு வீரர்கள் இங்கு வந்து விளையாடுவதும், இந்திய வீரர்கள் அங்கு சென்று விளையாடுவதும் வழக்கமான ஒன்று. எனவே, விளையாட்டு வீரர்களை திருப்பி அனுப்புவது சரியான முடிவல்ல என்று கருணாநிதி தெரிவித்தார். (ந-11)

## போர் வெற்றி...

இதுவரை யுத்தம் வெற்றிகொள்ளப்பட்ட ஒன்றே நடந்துள்ளது.

அதனை விற்று தின்கிறதைத் தவிர தற்போதைய அரசாங்கம் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை. கிராமத்தில் துறை முகம் ஒன்றை நிர்மாணித்தபோதிலும் அதற்கு கப்பல்கள் வருவதில்லை.

ஒரு விமான நிலையம் இருக்கும் போது பாரிய விமான நிலையம் அமைக்கப்படு கிறது எனவும் சரத் பொன்சேகா இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ந-11)


Sep 8 ஆம் திகதி யாழ் மாநகரில்
BCAS CAMPUS

BCAS வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

Seminar & Counseling 2012

- நவீன சர்வதேச தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள்
- சர்வதேச உயர்கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகள்
- உயர்கல்விக்கான புலமைபரிசில் வாய்ப்புகள்
- மிக குறைந்த செலவில் குறுங்கால தொழிற்பயிற்சி மூலமான உயர்தொழில் வாய்ப்புகள்
- குறைந்த தகைமையுடன் பொறியியல் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்புக்களுக்கான இலகு வழிமுறைகள்
- **UK. Australia, Canada, USA** போன்ற நாடுகளுக்கான **Student Visa**க்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளும் புதிய ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளும்.

பெறுமதிமிக்க ஊக்குவிப்பு பரிசுகளுடன்.........



திகதி
2012-09-08 (சனிக்கிழமை)

நேரம்
காலை 10.00a.m - 02.00p.m

இடம்
Gnanams Hotel
301, Clock Tower Rd
(யாழ் போதனா வைத்தியசாலை பின்புறம்)

இது போன்ற பெறுமதிமிக்க ஆலோசனைகளோடு தனிப்பட்ட முறையில் மாணவர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்களால் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு
0777 444 225
0777 286 877

அனுமதி முற்றிலும் இலவசம்

British College of Applied Studies
• Colombo • Dehiwela • Kandy • Batticaloa • Doha - Qatar

(சி-948)

மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இவ்வறிவுரை பட்டறையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.
www.bcas...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னையா கந்தையா

(ஓய்வுபெற்ற கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கொள்வனவு உத்தியோகத்தர்)



ஏழாலை பலலையை பிறப்பிடமாகவும் திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் ஓய்வு பெற்ற கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்க கொள்வனவு உத்தியோகத்தர் சின்னையா கந்தையா அவர்கள் 04.09.2012 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் திருமதி குலசேகரியின் அன்பு கணவரும் க.சிவகுமார் (பொறியியலாளர்,லண்டன்), க.கிரிதரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), திருமதி நிமல்தேவா கிரிஜா (சட்டத்தரணி, கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.வருணன், சி.யுதிகா, நி.ஹரி, நி.யாதவ், கி.லக்ஷனா, ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் நாளை 06.09.2012 அன்று அன்னாரின் இல.137, திருநகர், கிளிநொச்சி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: 1. குலசேகரி கந்தையா(மனைவி)
2. க.சிவகுமார்(மகன்)
3. க.கிரிதரன்(மகன்)
4. திருமதி நி.கிரிஜா(மகள்)

தொடர்புகளுக்கு:- 0778752346

(சி-944)

# அரசின் வெற்றிக் ...

இந்நடவடிக்கையும் கிழக்கு மக்களின் மனதில் அரசு மீதான அதிருப்தியை மேலும் வளர்த்து விட்டுள்ளது.

இவற்றையும் விட அரசின் இரகசிய தேர்தல் கணக்கெடுப்பிலும் மக்களின் கருத்து அரசுக்கு கசப்பான முடிபையே தெரியப்படுத்த கிழக்கில் அரசின் வெற்றி அஸ்தமிக்கத் தொடங்கியுள்ளது.

பாரதூரமான வகையில் எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்கள், அலுவலகங்கள் மற்றும் உடைமைகள் தாக்கப்படுவதால் போர் வெற்றியால் அரசின் மீது இருந்த மக்களின் அதீத ஆதரவும் தற்போது மங்கி வருகிறது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது வேட்பாளர்களுக்காக ஒருபுபுறம் ஏறுமுகமாக தனது அனல்பறக்கும் தேர்தல் பிரசாரத்தை வெற்றிகரமாகத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றார். அவருக்கு சிங்கள மக்களும் தமது ஆதர வை தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

மற்றொரு புறம், முஸ்லிம் காங்கிரஸும் அரசில் இருந்து விலகி தனது ஆதரவை தற்போது சற்று அதிகரித்துக் கொண்டுள்ளது.

ஆனால் அரசின் ஆதரவு வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்துடன் சேர்த்து அங்கு வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தோல்வியின் பீதியில் அரசு உள்ளதால் எதிர்வரும் 8-ம் திகதி நடைபெறவுள்ள கிழக்குத் தேர்தல் நீதியான முறையில் நடைபெறுமா என அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ந-8)


## ELF விற்பனைக்கு உண்டு

68 -XXXX தொடர் இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள 'ISUSU'வாகனம் விற்பனைக்கு உண்டு. லீஸ் வசதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
0770457603,0779533700

(350)

## FRENCH LANGUAGE CENTRE

FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச பரீட்சைக்கு எமது நிறுவனத்தின் ஊடாக தோற்றி சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

France, Canada க்கு திருமணம் முடித்து செல்லவுள்ளோர், France க்கு செல்லவுள்ளோரும் கற்றுக் கொள்ளலாம்
(எமது நிறுவனத்தில் கற்பதற்கு ஆங்கில அறிவு அவசியமில்லை)

பல்கலைக்கழக உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்களுக்கு கட்டண கழிவு வழங்கப்படும்.
விரிவுரைகள் France இல் இருந்து ஆசிரியப் பயிற்சி பெற்றவரினால் மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில்
83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
(பிளா உணவகம் அருகில் உள்ள லேனில்)
ஆரம்பம் : 08.09.12 சனி 2 pm

நெல்லியடியில்
M.M.V வீதி,
காளிகோவிலடி,
நெல்லியடி.
ஆரம்பம் : இன்று (05.09.2012) 3 pm

தொடர்புகளுக்கு : 0779789456

(348)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, Jaffna. 0212228250

வர்த்தகத்துறை மாணவர்களே!!!

தற்போது நிறுவனங்கள் கையால் கணக்கெழுதும் முறையிலிருந்து கணனிக் கணக்கியலுக்கு மாறிவிட்டன.

நீங்கள் கணனிக்கணக்கியல் கற்றுவிட்டீர்களா?? உங்களுக்காக...
கம்பனிக்கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி பிரபல மென்பொருட்களுடாக....

**Diploma in Computerized Accounting**

ACCPAC (Canada) + Quick Book Premier (USA) + MYOB V.1.5 (Australia)

வகுப்புக்கள் ஆரம்பம் : 07/09/12 , 12/09/12 – 09AM/04PM
Tally - 11AM 08/09/12, 09/09/12 – 09AM/04PM

(சி-942)

## ஊழியர்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு மூன்று நேர உணவு, மாதாந்தம் கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதி, நிரந்தர வேலைவாய்ப்பு இவை அனைத்துக்கும் கீழ்க் காணும் ஊழியர்கள் தேவை:

01) சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்கள்)
02) குசினி உதவியாளர்
03) பாதுகாப்பு ஊழியர்
04) சுத்திகரிப்பாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
05) உதவி முகாமையாளர்
06) அலுவலக உதவியாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
07) காசாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
08) ரீ மேக்கர்
09) சுவீட் மேக்கர்ஸ்
10) அரையல் பகுதி, ஏனைய குசினி வேலையாளர்.

தொடர்புக்கு: 36,38, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 917753

(353)


## ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு 19 06 1963 — இறப்பு 18 08 2011



## திருமதி நந்தகுமாரி அமிர்தலிங்கம்

திதி-பஞ்சமி (2012.09.05) புதன்கிழமை

குடும்பத்தின் குலவிளக்கே! அன்பின் உறைவிடமே!
பாசத்தின் நிறைவிடமே! நிகரற்ற நல்முத்தே!
பண்புடன் எம்மை தாங்கிய தாயே!
சென்றது எங்கே தேடுகிறோம் நாமே
கண்களில் நீரும் தனிமையில் நாமும்
நாடுகிறோம் தாயே வந்திடுவீரே
உங்களை நாடி வாழ்ந்திடும் போதும்
உங்கள் நினைவுகள் வாட்டிடும் எம்மை!
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

திக்கம் இங்ஙனம் : குடும்பத்தினர்

[331]


## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 650 /= Germany 710 /= France 765 /=
- யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம். (Door to Door Service)
- 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை (TDD Service)
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
International Courier & Cargo Service


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.